★ விலை ரூபா 1-00

புதிய வகுப்புகள்
G. C. E. A/L 1983, 84
விஞ்ஞானம், வர்த்தக . கலை)
G. C. E O/L 1983
6-ம், 7-ம், 8-ம், 9-ம் வகுப்புகளும்
(விடுதி வசதி உண்டு)
ஆரம்பம்: 1-1-1983
BOND INSTITUTES
JAFFNA
Phone: 24258 Grams: BOND
56'2

# ஈழநாடு
THE EELANADU

புதிய வகுப் கள்
SPOKEN ENGLISH WITH GRAMMAR
BASIC MATHS
BASIC ENGLISH
TYPING, SHORT HAND
வகுப்புகள்
ஆரம்பம்: 1 - 1 - 1983
BOND INSTITU ES
JAFFNA
5651

மலர் 24 மார்கழி 13 ரபி-அவ் 12 இதழ் 318
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 28—12—82

## மக்கள் தீர்ப்பில் மட்டக்களப்பு மாவட்டம்:

# அரச அதிபர் மீது மட்டு. எம்.பி.

# குற்றச்சாட்டு!

## அதிகாரதுஷ்பிரயோகம்பற்றி பட்டிருப்பு எம். பி. கண்டனம்

(நமது நிருபர் உதயகுமார்)

பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பின்போது மட்டக்களப்பு மாவட்டவிபரங்களை அரசாங்க அதிபர் வெளியிட்ட முறைபற்றி ஜனுப் பரீத் மீரா லெப்பை எம். பி. நேற்று நடந்த மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திசபைக் கூட்டத்தில் கண்டனம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு அபிவிருத்தி சபைக் கூட்டம் நேற்று சபைத் தலைவர் திரு. சம்பந்தமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. அமைச்சர்கள் தேவநாயகமும், இராசதுரையும் கலந்து கொள்ளவில்லை.

ஜனுப் மீரா லெப்பை பேசுகையில்: "மட்டக்களப்புத் தொகுதி வாக்குகள் ஒன்று இரண்டு என்று கணக்கெடுக்கப்பட்டது நான் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவன். தொகுதியின் வாக்கு விபரங்களை ஒன்று இரண்டு என்ற பிரிவின்படி

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ். மாநகராட்சி மன்றம்

## அடுத்த வருட பட்ஜட் நிறைவேறியது

(யாழ்ப்பாணம்

யாழ். மாநகராட்சி மன்றத்தின் 83ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம், விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபின்னர்வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த பதினொரு உறுப்பினர்களுடன் தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர் திரு செபஸ்தியாம்பிள்ளையும் சேர்ந்து ஆதரித்து வாக்களித்தார்.

தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர்களான எதிரணித்தலைவர் டாக்டர் ஏ எல். ஏபிரகாம், திரு துரைராசா, சாந்திகுமார், திரு. எஸ் தேசுதாசன். சட்டத்தரணி எஸ். செல்வராசா ஆகியோர் எதிர்த்துவாக்களித்தனர்.

யாழ் மாநகராட்சி மன்ற முதல்வர் திரு இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் இந்த வரவு செலவுத்திட்டம் விவாதத்துக்கெடுக்கப்பட்டது.

83ம் ஆண்டு வரவு செலவுத்திட்டம் 8 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. [மா]

## இறம்பைக்குளம் சம்பவம்
## ஜனவரி 10க்கு முன் வழக்குத்தொடர உத்தரவு

(வவனியா)

இறம்பைக்குளம் அந்தோனியார் கோயில் உண்ணுவிரத சம்பவம் தொடர்பாக பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடப்பட்டிருந்த 9 பேரும்நேற்று வவனியா நீதிமன்றத்தில் நீதிபதி திரு ஏ. டி. எம் பெட்டியாகொட முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

எஸ் பெர்னுண்டோ, டாக்டர் இராசசுந்தரம், ஈழவேந்தன், எம். எஸ் கந்தையா, வாசுதேவா, என். கருணுநிதி, எஸ். ரவிகுமார், டேவிட் நாகநாதன், ஆர். விஞசிமுத்து ஆகியோரே அந்த ஒன்பது பேரும் ஆகும்'

(8-ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் மூன்று கடைகள் சேதம்! இன்ஸ்பெக்டர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(கொழும்பு)

திருகோணமலையில் நேற்று முன்தினமிரவு நிகழ்ந்த சம்பவத்தில் மூன்று கடைகள் முற்ருக சேதப்படுத்தப்பட்டன.

நள்ளிரவு படம்பார்த்துவிட்டு கடைக்குச்சென்ற மூவருக்கும் கடையிலிருந்தவர்களுக்கு மிடையே தாக்குதல் சம்பவம் நிகழ்ந்ததாகவும், இதனைத்தொடர்ந்து சிருடையில்வந்த சிலர் திருஞானசம்பந்தர் வீதியிலுள்ள மூன்று கடைகளை சேதப்படுத்தியதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல் காரணமாக உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் காயங்களுடன் திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## கடத்தப்பட்ட வான் கைப்பற்றப்பட்டது

[வவனியா, ஒட்டுசுட்டான் நிருபர்கள்]

முருங்கனில் வைத்து மூன்று துப்பாக்கி இளைஞர்களினல் கடத்திச் செல்லப்பட்ட வான், விஸ்வமடு காட்டுப்பகுதியில் தேடுவாரற்ற நிலையில் ஒட்டுசுட்டான் பொலிஸாரினல் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த ஏழாம் திகதி முருங்கனில் வைத்து மூன்று துப்பாக்கி இளைஞர்களினல் மேற்படி வான் கடத்திச் செல்லப்பட்டது.

முள்ளைத்தீவு - பரந்தன் வீதியில் வேணுவில் காட்டுப்பகுதியில், பிரதான பாதையில்

(8-ம் பக்கம் பார்க்க)

காணவில்லை - அல்சேஷன் நாய்
யாழ்ப்பாணம் கோவில் வீதி, 122-ம இலக்கத்தில் இருந்த 'பிளாக்கி'' என்ற மஞ்சல் நிறமும், முதுகில் கறுப்பும் விழுந்த அல்சேசனை'' (Alsotion) ஞாயிறு இரவில் இருந்து காணவில்லை தகவல் இரகசியம் பாதுகாக்கப்படும். தகுந்த சன்மானமும் வழங்கப்படும். துயருறும் பிள்ளைகள். 5658

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம்
உதைபந்தாட்டப் போட்டி 1982
1ம் குழு (1st x 1)
இறுதி (Finals)
செவ்வாய்க்கிழமை இன்று (28-12-82) பி. ப. 2-45
யாழ். மத்திய கல்லூரி
எதிர்
கொக்குவில் இந்துக்கல்லூரி.
மகாஜன கல்லூரி
எதிர்
நடேஸ்வரா கல்லூரி
பிரதம விருந்தினர்:
திரு. எம். சிமியாம்பிள்ளை அவர்கள்
(கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.)
க. மு. சா. ஹமிட்
உதைபந்தாட்டச் செயலாளர்
ஒஸ்மானியா கல்லூரி,
யாழ்ப்பாணம், 26-12-82.
(5654)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

லாண்ட் மாஸ்டர் [Land Master] கையால் இயக்கத் தக்க உழவுயந்திரம் [Tractor] பிறவுன்ஸ் கொம்பனியால் புதுப்பிக்கப்பட்டு சிறந்த நிலையில் இருக்கிறது. 65, பழைய பூங்காவன வீதி, யாழ்ப்பாணம். 5635

### தேவை

சாவகச்சேரியில் வியாபார ஸ்தல மொன்றிற்கு பெண் விற்பனையாளர்கள் தேவை. படித்தவராயும் விற்பனை அனுபவமுள்ளவராயும் இருத்தல் விரும்பத்தக்கது. சொந்தக் கை ஒப்பத்தில் தொடர்புகொள்ளவும். விளம்பர இல: 5629 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 5629

### விற்பனைக்கு

புதிய ஒரு வருஷம் பாவிக்கப்பட்ட Sisil குளிர்சாதனப் பெட்டியும், நல்ல நிலையில் உள்ள 9 ஸ்ரீ பஜாஜ் ஸ்கூட்டரும் விற்பனைக்குண்டு தொடர்பு: 4, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (5639)


"அபிவிருத்தி சபையில் சமர்ப்பிக்கப்படும்

# அறிக்கைகள் முழுவதும் தமிழிலேயே வாசிக்கவேண்டும்

## — மன்னார் எம். பி.

(மன்னார்)

"மாவட்ட அபிவிருத்தி சபையில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகள் முழுவதும் தமிழிலேயே வாசிக்கப்படவேண்டும். ஆங்கிலம் கலந்து தமிழில் வாசிப்பதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். இத்துடன் மாவட்ட அபிவிருத்தி சபையில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளை சபைத் தலைவரே வாசிக்கவேண்டும்."

இவ்வாறு மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மன்னார் எம். பி. திரு பி. எஸ். சூசைதாசன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: 'அபிவிருத்தி சபையில் எடுக்கப்படும் தீர்மானங்களின்படி அபிவிருத்தி சபையின் வரவு-செலவுத்திட்டத்தைத் தயாரிக்கமுடியாது. அவ்வாறு வரவு-செலவுத்திட்டத்தைத் தயாரிப்பது அபிவிருத்தி சபைக்கு அப்பாற்பட்ட விடயமாகும். ஆதலால் அபிவிருத்தி சபைக்குக் கிடைக்கும் வருவாயைக்கொண்டே வரவு-செலவுத்திட்டம் தயாரிக்கப்படவேண்டும்.'

## ஆலயத்தில் திருட்டு பொருட்களை விற்கமுயன்றபோது அகப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

ஆலயத்துக்குள்ளிருந்த பெறுமதியான செப்புப் பொருட்களை விற்கமுயன்ற ஒருவரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து பொலிசில் ஒப்படைத்தனர்.

ஏழாலையைச் சேர்ந்த சின்னத்துரை சுகுமாரன் (வயது 27) என்பவரே பொதுமக்களிடம் அகப்பட்டுக்கொண்டவராவர்.

இவர் ஏழாலையிலுள்ள வயிரவர் ஆலயத்தில் இருந்த பெறுமதிவாய்ந்த செப்புக் குலங்கள், பூசைமணி, செம்புச் குத்துவிளக்கு ஆகியவற்றை தாவடியில் வைத்து விற்பனை செய்து கொண்டிருந்த போது பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டாராம். பின்னர் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொன். சுகுணேந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டார்.

விசாரணை மேற்கொண்ட பொலிஸ் கான்ஸ்டபிள் வி. தங்கவேலு திருடப்பட்ட பொருட்களை கைப்பற்றியதுடன் மேல் விசாரணையை டாரி.

(மா)

## தெல்லிப்பழையில் கிறிஸ்மஸ் விழா

(மயிலிட்டி)

தெல்லிப்பழையில் யேசுவின் பிறந்ததின ஆராதனைகள் தெல்லிப்பழை புனித தேவாலயத்தில் புனித ஆயர் அருட்திரு ஈ. ஆர். அம்பலவாணர் தலைமையில் இடம்பெற்றன. இம்முறை ஆடம்பரமான முறையில் எதுவுமே இடம்பெறவில்லை. வழமைக்கு மாறாக இங்குள்ள மக்கள் சோக நத்தாரே கொண்டாடினர்.

வாலிபர் சங்கங்கள், கழகங்கள் யாவும் இம்முறை நத்தார்விழாவைக் கொண்டாடவில்லை. இம்முறை "கரோல் சேவிசு"ம் இடம்பெறவில்லை.

(அ)

# திருவாசக விழா இன்று ஆரம்பம்

(மன்னார்)

திருக்கேதீஸ்வரம் திருவாசக மடத்தில் நேற்று ஆரம்பமான விழா புதன்கிழமை வரை நடைபெறும் திருவாசக விழாவில் கலந்து கொண்டு கதாப்பிரசங்கம் நடத்தவென இராமேஸ்வரம் தேவஸ்தான அலங்காரப்பட்டர் புரோகிதருமானஈசர் சிவசிறீ கோடிலிங்க சங்கர சாஸ்திரிகள் வந்துள்ளார்.

ஈழத்து சிவனடியார் கூட்டத்தினரால் நடத்தப்படும் இத் திருவாசக விழாவிற்கான ஏற்பாடுகளை திருவாசக மடாதிபதி திரு சரவணமுத்து சுவாமிகள் மேற்கொண்டுள்ளார். இத்திருவாசக விழாவில் தருமபுரம் சிறீ குருசாமி தேசிகரும், ஈழத்து சமய அறிஞர்களும் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.

விழாவின்போது சிவபூசை மகாநாடு, திருவாசக சிவநாம பஜனை, சொற்பொழிவு போன்ற பல நிகழ்ச்சிகள் இடம்பெறும். திருவாசக விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியை மன்னார் அரசாங்க அதிபர் திரு ஏ. ஜே. செந்தில்நாதனும், இரண்டாம் நாள் நிகழ்ச்சியை இலங்கை வங்கியின் மன்னார் கிளை முகாமையாளர் திரு உமாபதியும் ஆரம்பித்து வைப்பார்கள்.

## நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வி

(புலோலி)

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் திரு. கதிர்காமலிங்கத்திற்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியில் முடிந்தது. இயக்குநர்சபை உறுப்பினரொருவர் ராஜினாமாச் செய்துள்ளார்.

இப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தலைவர் திரு. கதிர்காமலிங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றை நான்கு இயக்குநர்கள் கையொப்பமிட்டு இயக்குநர் சபைக் கூட்டத்தில் சமர்ப்பித்தனர். நம்பிக்கையில்லாத்தீர்மானம் பற்றி விவாதிப்பதிற்கு தவணையொன்று கொடுக்கப்பட்டது. தவணையின் படி நம்பிக்கையில்லாப்பிரேரணை மீது விவாதிப்பதற்கெனக் கூட்டுறவு பரிசோதகர் திரு எஸ். சிவகுருநாதன் தலைமையில் கூட்டம் ஆரம்பமானது. ஆனால் விவாதத்திற்கு வேண்டிய இயக்குநர்சபை உறுப்பினர்கள் சமூகமளிக்கவில்லை. இதனால் தலைவர் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியில் முடிந்தது.

தலைவர் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத்தீர்மானம் முறைபற்றது என்பதனால் இயக்குநர் சபை உறுப்பினரொருவர் தமது பதவியை ராஜினாமாச் செய்தார். சங்கத்தின் தலைவராகத் திரு. கதிர்காமலிங்கமே சேவையாற்றி வருகின்றார்.

## பெற்றோரின் கவலையீனம் குழந்தை மரணம்

(கிளிநொச்சி)

"குழந்தைகளுக்கு போதிய பாதுகாப்பு கொடுத்து சீராக வளர்க்கவேண்டியது பெற்றோரது கடமை. பெற்றோரின் கவலையீனத்தால் அநியாயமாக ஒரு பச்சிளங்குழந்தையைப் பறிகொடுத்துவிட்டீர்கள்".

கிளிநொச்சி ஐயன்குளத்தைச் சேர்ந்த மார்ட்டின் செல்வராணி என்னும் 2 வயது பாலகி கிணற்றில் வீழ்ந்து மரணமானது சம்பந்தமான விசாரணையின்போது மரண விசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் குழந்தையின் பெற்றோரைப் பார்த்து இவ்வாறு கண்டித்தார்.

கிளிநொச்சி பொலிசார் சாட்சிகளை ஆஜர்செய்தனர். மரணமான குழந்தை செல்வராணியின் தாய் மா. பூபதி சாட்சியமளிக்கையில்; "சம்பவதினம் காலை நான் கிணற்றுக்குப் பக்கத்திலிருந்து பாத்திரங்கள் கழுவிக்கொண்டிருந்தேன். குழந்தை அருகில் விளையாடிக்கொண்டிருந்தது. பாத்திரங்கள் கழுவியபின் குழந்தையை பார்த்தேன்; காணவில்லை; கிணற்றில் எட்டிப் பார்த்தேன்; தண்ணீரில் குழந்தை மிதந்தது. அயலவரின் உதவியுடன் குழந்தையை பிணமாக மீட்டோம்".

மரணவிசாரணையை மேற்கொண்ட திரு யோகலிங்கம் விபத்துமரணமெனத் தீர்ப்பு வழங்கினார்

## தங்களது மரண வீட்டுக்கு வருமாறு

# அழைப்பு விடுத்து உயிர்மாய்த்த நண்பர்கள்!

(மாவிட்டபுரம்)

தமது மரணவீட்டுக்கு வந்துவிடவேண்டுமென அயலவர்களுக்கு அழைப்புவிட்டு பாழடைந்த மண்டபத்தில்வைத்து இரு நண்பர்கள் நஞ்சருந்தி மரணத்தைத் தழுவிக்கொண்டனர்

சண்டிலிப்பாய் தெற்கு ஐயனார் கோவிலடியில் நடந்த இச்சம்பவத்தில் இராசலிங்கம் விஜயகுமார்(28வயது), ஸ்ரீமுருகன் (26 வயது) ஆகியோரே இறந்தவர்களாவர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு கே. சேனாதிராசா விசாரணை நடத்தினார்.

காலமான இருவரும் நண்பர்கள். ஸ்ரீமுருகன் மட்டக்களப்பைச் சேர்ந்தவர். இவர்களிருவரும் கூட்டாக வர்த்தகம் செய்துவந்தனர். அதிக நஷ்டம் ஏற்பட்டதையடுத்து மனமுடைந்தனர். சம்பவதினம் இருவரும் மது அருந்திவிட்டு நஞ்சுப் போத்தல் ஒன்றையும் வாங்கி மதுவுடன் அயலவர்களுக்கு அதனைக் காட்டி "இதனை நாம் அருந்தப்போகிறோம். மரண வீட்டுக்கு எல்லோரும் வந்துவிடுங்கள்" என்று கூறினார்களாம். பின்னர் பாழடைந்த மண்டபம் ஒன்றுக்குச் சென்று இருவரும் நஞ்சை அருந்தி மரணத்தை தழுவினார்கள் என்று விசாரணையில் தெரியவந்தது.

தற்கொலை என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. காங்கேசன்துறைப்பொலிஸ் கான்ஸ்டபிள் இ. பிரகாசம் விசாரணைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

## இன்று மகாஜன எதிர் நடேஸ்வரா இறுதிப் போட்டி

(மயிலிட்டி)

யாழ். மத்திய விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்படும் முதலாம் பிரிவுக்கான உதைபந்தாட்ட இறுதிப்போட்டி இன்று பிற்பகல் 2மணிக்குயாழ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். இப்போட்டியில் மகாஜனக் கல்லூரியை எதிர்த்து நடேஸ்வராக்கல்லூரி மோதவிருக்கிறது. பார்வையாளர் வீடு திரும்புவதற்கென விசேட பஸ்சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

## ஆருத்திரா தரிசனமும் திருவூஞ்சலும்

(மயிலிட்டி)

வர்த்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலயத்தில் நடைபெறும் திருவெம்பாவை உற்சவம் இம்மாதம் 30-ந் திகதி ஆருத்திரா தரிசனத்துடன் முடிவடையும். தினமும் இங்கு திருவெம்பாவைஓதப்பட்டுவருகிறது. அதிகாலையில் வாலிபர்கள் திருப்பள்ளிஎழுச்சி, திருவெம்பாவை பாடி ஊர் சுற்றி தினமும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

30-ந் திகதி நண்பகல் விநாயகப்பெருமான் திருவூஞ்சலும் அதனைத் தொடர்ந்து சுவாமி விழக்கோலம் பூண்டு வீதியுலா வருதலும் இடம்பெறும்.

(அ)

# வீடுளரிப்பு வழக்கு: எதிரிக்கு றிமாண்ட்

(ஊர்காவற்றுறை)

வேலணை சாட்டி என்னுமிடத்திலுள்ள செல்லையா கருணானந்தசிவம் என்பவருக்குச் சொந்தமான மூன்று வீடுகளை எரித்து முப்பதினாயிரம் ரூபா சேதமேற்படுத்தியதாக அதே ஊரைச்சேர்ந்த கயிலைநாதன் என்பவருக்கெதிராக ஊர்காவற்றுறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கைவிசாரணை செய்த ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திரு ரி. சே. என் திலகன் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு தண்டனை வழங்குவதை இம்மாதம் 31ந் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

அன்றுவரை எதிரியை விளக்கமறியலில் வைக்குமாறும், எதிரியின் கைவிரலடையாளங்களைப் பதிவு செய்யுமாறும் நீதிபதி மேலும் உத்தரவுகளை பிறப்பித்துள்ளார்.

முறைப்பாட்டுக்காரரின்சார்பில் சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன் ஊர்காவற்றுறை பொலிசாரினதும் சட்டத்தரணி த. தனராஜசிங்கத்தினதும் உதவியுடன் ஆஜரானார். எதிரியின் சார்பில் சட்டத்தரணி ந. ஸ்ரீகாந்தா ஆஜரானார்.

## கண்டனத் தீர்மானம்

(துணுக்காய்)

பயங்கரவாத தடைச்சட்டம் என்றபோர்வையில் பல மதகுருமார்களையும், விரிவுரையாளர்களையும் இராணுவத்தினர் கைது செய்து இராணுவ முகாம்களில் தடுத்து வைத்து நீதிக்கும் மனித உரிமைக்கும் அப்பாற்பட்ட முறையில் துன்புறுத்தப்படுவதாக கண்டித்து யோகபுரம் கிராமோதய சபை தீர்மானம் நிறைவேற்றி பிரதேசஅபிவிருத்திச்சபை, மாவட்ட அபிவிருத்திச்சபை ஜனாதிபதி ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ளது.

கிராமோதய சபை தலைவர் திரு. வி. வேதநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் அல்லது நீதி விசாரணைக்கு நிறுத்தப்படவேண்டுமெனவும் தீர்மானித்து மகஜர் அனுப்பப்பட்டது

காங்கேசன்துறையில்

## மின்னிணைப்பு வேலை பூர்த்தி

(மயிலிட்டி)

காங்கேசன்துறை எம். பியின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட மின்சார இணைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. இலங்கை மின்சாரசபை உத்தியோகத்தர் திரு. த. கருணாமூர்த்தி ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபா செலவில் கொல்லங்கலட்டிகலட்டிப்பகுதியில்வசிக்கும்மக்களுக்கு நீர்வழங்கப்படவிருப்பதாகத் தெரிவித்தார். இவ்வேலைகளை அவரே மேற்கொண்டிக்கிறார். அத்துடன் விளிசிட்டி—தையிட்டி பகுதி

6-ம் பக்கம் பார்க்க)

# "ஆப்கானிஸ்தானில் சோவியத்தின் திட்டங்கள் தோல்விகண்டுள்ளன!"

## -- ஜனாதிபதி றீகன்

நியுயோர்க் டிச, 27

"ஆப்கானிஸ்தானில் சோவியத்தின் அரசியல் நோக்கங்களுக்கு வெற்றிகிடைக்கவில்லை. 'கம்யூனிஸத்தை' அங்கு பரப்பும் அதன்திட்டத்துக்கும் தோல்வியே கிடைத்துள்ளது.' என்று அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றீகன் செய்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

1980ல் ஆப்கானிஸ்தானினுள் பிரவேசித்த சோவியத் இராணுவம் அங்கு மூன்றாண்டுகளை நிறைவு செய்துள்ளதை முன்னிட்டே இச்செய்தி வெள்ளைமாளிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

திரு. றீகன் இச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது: 'ஆப்கானில் சோவியத் யூனியனின் ஆக்கிரமிப்பு மனித சுதந்திரத்துக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றது.

சோவியத் ஏகாதிபத்திய வாதிகள் ஆப்கான் மக்களை நசுக்கி அவர்களைச் சுரண்டுகிறார்கள். அங்கு சுமார் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் சோவியத் துருப்புக்கள் சக்திவாய்ந்த இராணுவத் தளபாடங்கள் சகிதம் நிலைகொண்டுள்ளன, ஆயினும் அவற்றால் எதிர்பார்த்ததைப்போல இலகுவில் வெற்றிகளை ஈட்ட முடியவில்லை. சுதந்திர உணர்வுமிக்க ஆப்கான் மக்கள் தமது விடுதலைக்காக போராடிக் கொண்டேயிருக்கிறார்கள்.

இப்போராட்டங்களினால் வீண் உயிர்ச் சேதங்களே [illegible] விளைந்து வருகின்றன. சோவியத் இவற்றைத் தவிர்க்காது. இரசாயன ஆயுதங்களுடனும் சோவியத் கிளர்ச்சியாளர்களுடன் மோதலில் குதித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில், அமைதி சமாதானம் நிலவவேண்டுமானால் அங்கிருந்தும் சோவியத் துருப்புகள் விலகிக்கொள்ள வேண்டும்.

ஆப்கானில் தற்போது உறுதியான உள்நாட்டரசாங்கம் இல்லை. இதனாலேயே வெளிநாட்டுச் சக்திகள் அங்கு ஆதிக்கஞ் செலுத்தி வருகின்றன

தமது விடுதலைக்காகப் போராடி வரும் ஆப்கான்மக்களுக்கு பக்கபலமாகநின்று உதவிகளை வழங்க அமெரிக்க எப்போதும் தயாராக இருக்கின்றது." (கி)

---

## மாணவி தற்கொலை

(மட்டுவில்)

வருடாந்த இறுதிப் பரீட்சையில் திருப்திகரமான புள்ளிகள் பெறவில்லை என்று சிறிய தகப்பன் குறைபட்டுக்கொண்டார். இதனால் விரக்தியடைந்த மாணவி நஞ்சிடம்தஞ்சமடைந்தார்.

இப்பரிதாப சம்பவம் மறவன்புலோவில் இடம் பெற்றது.

16 வயதுடைய கே. வசந்தி என்ற மாணவியே இப்பரிதாப முடிவைத் தேடிக்கொண்டவராவார்.

சாவகச்சேரி திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. என். தர்மேந்திரன் மரணவிசாரணை நடத்தினார்

விசாரணையின்போது மேற்படி தகவல் வெளியாயிற்று.

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

---

## சிறைக்கைதிகள் கலாட்டா: ஊழியர் ஒருவர் பலி!

நியூயோர்க், டிச 27

அமெரிக்காவின்வேர்ஜீனியா மாநிலத்தைச்சேர்ந்த சிறைச்சாலையொன்றில் சுமார் 100 சிறைக்கைதிகள் கலாட்டா செய்ததனால் ஒரு சிறைப் பராமரிப்பு ஊழியர் கொலை செய்யப்பட்டார்.

இக்கலாட்டா 45நிமிடங்கள் நீடித்ததாகவும், சாப்பாட்டறையில் கைதிகளுக்கிடையே எழுந்த வாய்த்தர்க்கமேஇதற்குக் காரணமென்றும் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இம்மோதலின்போதுகதிரைகள், உணவு பரிமாறும் தளபாடங்கள், மற்றும்அங்கிருந்த சில கடினமான பொருட்கள் உபயோகிக்கப் பட்டனவென்றும், மரணமான ஊழியர் கடமை முடிவடைந்து கைதிகளுக்கான உடையில் நின்றாரென்றும், இவர் யார் என்று இனங்காணப்படாததினாலேயே கொல்லப்பட்டார் என்றும், அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இக்கலாட்டாவை அடக்க கடமையில் நின்ற சிறைக்காவலருடன்,கடமைமுடிவடைந்து நின்றோரும் செயல்பட்டனர்

பல கைதிகள் படுகாயமடைந்தனரென்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

---

## அப்பாவி லெசோத்தோவாசிகளின் பூதவுடல்கள் நல்லடக்கம்!

லண்டன், டிச. 27

தென்னாபிரிக்க துருப்புக்களின் தாக்குதலுக்குள்ளாகி உயிர் துறந்த லெசோத்தோ வாசிகள் 40 பேரின் பூதவுடல்கள் நேற்று லெசோத்தோவின் தலைநகரில் அடக்கஞ்செய்யப்பட்டன.

இந்த 40 பேரில் ஆண், பெண் உட்பட பல சிறுவர் சிறுமிகளும் அடங்குகின்றனர்.

நன்கு ஆயுதந்தரித்த தென்னாபிரிக்கத் துருப்புகளினால் கடந்த 9ந் திகதி இவர்கள் லெசோத்தோவின் ஹிநொவ்ஸ் என்ற இடத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டனர்.

"தென்னாபிரிக்க துருப்புகள், இவ்வாறு பரந்த அளவில் சுதந்திர அயல் நாடுகளின் பிரஜைகளை கண்மூடித்தனமாக வேட்டையாடுகின்றன" என்று ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் ஒலிவர்ரம்போ, இறுதிச் சடங்குகளின் போது உரையாற்றினார்.

லெசோத்தோ மன்னர் மொஷூஷூ, பிரதமர் திரு. லீபுவா ஜொனாதன் ஆகியோரும் இந்த மரணச் சடங்குகளில் கலந்து கொண்டனர்.

தமது நாட்டிலிருந்து தப்பி ஓடியவர்களுக்கு புகலிடங்களை வழங்கினார்கள் என்றகாரணத்துக்காகவே இந்த அப்பாவி லெசோத்தோவாசிகள் தென்னாபிரிக்க துருப்புகளால் வேட்டையாடப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

---

## சவூதி அரசியல் அமைப்பில் புதிய மாற்றங்கள்!

றியாத், டிச. 27

சவூதி அரேபியா தனது அரசியல் அமைப்பில் புதிய மாற்றங்களைக்கொண்டுவரவுள்ளது. இதற்காக ஆலோசனைச் சபையொன்றும் சவூதி அரசால் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனைச்சபை, மந்திரிகள் மன்றத்துக்குத் தனது அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும். முக்கிய மதத் தலைவர்கள் உட்பட கல்விமான்கள் பலரும் இச்சபையில் அங்கம்வகிப்பர்.

75 லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட தேசமே சவூதி அரேபியா. இங்கு அரசகுடும்பத்தவரே ஆட்சிப் பொறுப்பை வகிக்கின்றனர்.

அரசியல் அமைப்பில் செய்யப்படவுள்ள புதிய மாற்றங்களில் பொதுமக்களும் அரசியலில் ஓரளவு பங்குகொள்ளும் சந்தர்ப்பம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

வளைகுடா நாடானகுவைத் அரசகுடும்பத்தவரின் பொறுப்பிலேயே இருந்து வந்தது ஆனால் அங்கு ஜனநாயகரீதியில் பொதுமக்களுக்கும் அரசியலில் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த முன்மாதிரியைப் பின்பற்றியே சவூதி அரசியல் அமைப்பிலும் மாற்றம் கொண்டுவரப்படவுள்ளது. (கி)

---

## நத்தார், கொண்டாடிய படகு இல்லம் தீப்பிடித்தது

### 6 பேர் கருகி மாண்டனர்!

மட்றிட், டிச 27

நீரில் மிதக்கும் படகு இல்லமொன்றில் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடிய ஆறு பேரடங்கிய குடும்பமொன்று தீ விபத்தில் சிக்கி உயிரிழந்தது.

இப்பரிதாப சம்பவம் வட தென் ஸ்பெயினின்துறைமுகப் பகுதியில் இடம் பெற்றது.

கணவன், மனைவி, இருவருக்கும் வயது 31. இவர்களது ஒன்பது, ஐந்து, இரண்டு வயதான மூன்று குழந்தைகள் உட்பட 48 வயதான வேறொருஉறவினருமே இந்த விபத்தில் உயிரிழந்தனர்.

இந்தபடகு இல்லம் மீன்பிடிப்பதற்கென உபயோகிக்கப்படுவதென்றும், இது திடீரென தீப்பற்றி எரிந்ததைக் கண்டு தாம் இதனை அணுகி வாயில் கதவொன்றை உடைத்து உள்ளே புகுந்ததாகவும், அங்கு ஒன்பது வயதான சிறுவன்மட்டுமே உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்ததாகவும், பின்னர் இப்பையனை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோதே அவன் உயிரிழந்தான் என்றும் மீட்புப்பணியில் இறங்கிய பொலிசார் தெரிவித்தனர். (கி)

---

## ஏழைகளுக்கு உதவித்திட்டம்

(புலோலி)

மேற்கு ஜேர்மன் அரசாங்கத்தின் உதவியுடன் வதிரிக் கிராமத்திலுள்ள 25 ஏழைக் குடும்பங்களுக்கு மலசலகூடங்கள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன இதற்கான நடவடிக்கைகளை வதிரி அபிவிருத்தி மன்றத் தலைவர் திரு. எம். எஸ். சீனித்தம்பி மேற்கொண்டுள்ளார்.

---

★ "நாட்டைப்பிரிக்கும்

## வகுப்புவாத, பிரிவினைச் சக்திகளுக்கு இடமளிக்கக் கூடாது"

-- பிரதமர் இந்திரா

## "எதிர்க்கட்சிகளிடையே ஒற்றுமை அவசியம்"

-- முன்னாள் பிரதமர் தேசாய்

புதுடில்லி, டிச27

"நாட்டைக் கூறுபோடும் வகுப்புவாத சக்திகளுக்கும், பிரிவினைச் சக்திகளுக்கும் மக்கள் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது," என்று பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்று முன்தினம் கர்நாடக மாநிலத்தில் பரவலாக கலந்து கொண்ட பொதுக்கூட்டங்களில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திருமதி காந்தி மேலும் கூறியதாவது: "நாட்டின் அபிவிருத்தி, அமைதி என்பவற்றுக்கு மக்களின் இன மத பாகுபாடற்ற ஒற்றுமையே அவசியமாகும்.

ஒருநாட்டின் பலவீனத்தை அறிந்தே ஏனைய வெளிநாட்டுச் சக்திகள் அந்நாட்டினுள் தமது ஆக்கிரமிப்பை மேற்கொள்கின்றன,

பாரதத்தின் சிலபகுதிகளில் வகுப்புவாத பிரிவினைச் சக்திகள் அருவருக்கத்தக்க அரசியல் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்,

இதனால் எமது ஒற்றுமையீனத்தை அறிந்து வல்லரசுகள் தமது நடவடிக்கைகளுக்காக எமது நாட்டைப் பயன்படுத்தக்கூடும்.

ஆனால் பாரதம் எந்[illegible]தும் அணிசேராக் கொள்கையிலேயே நம்பிக்கை வைத்துள்ளது" என்றார்,

இதேவேளை, முன்னாள் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய், எதிர்க்கட்சிகள் ஒற்றுமையாக இயங்கவேண்டும் என்று ஹைதராபாத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார்.

"எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை நிபந்தனைகளின் அடிப்படையில் இருக்காது கூடாது ஒருமித்ததாக இருக்கவேண்டும்.

ஆனால் மத்திய அரசுக்கு எதிரான பிராந்திய கட்சிகளை எதிர்க்கிறேன்" என்று அவர் மேலும் கூறினார், (கி)

---

## கொத்தணி அமைப்பு: புதுக்குடியிருப்பு மக்கள் எதிர்ப்பு

(ஒட்டுசுட்டான்)

புதுக்குடியிருப்பிலுள்ள பாடசாலைகளை புதிய கொத்தணி அமைப்பின் கீழ்க் கொண்டுவர எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு புதுக்குடியிருப்பு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தை மகளிர் பாடசாலையாகவும், மற்றுமொரு பாடசாலையை ஆண்கள் உயர்நிலைப்பாடசாலையாகவும், றோமன் கத்தோலிக்கப் பாடசாலையை கனிஷ்ட பாலர் பாடசாலையாகவும் மாற்றுவதற்கு அதிகாரிகள் மட்டத்தில் முயற்சிகள் எடுக்கப்படுகின்றது.

மகா வித்தியாலயத்திலேயே உயர் கல்வி பெற எவ்வித வசதியும் இல்லாதபோது இப்பிரிவினைகள் மாணவர்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனைத் தவிர்த்து மகாவித்தியாலயத்தில் உயர் கல்வி பெறுவதற்கான வசதிகளைப் பெருக்குவதே சிறந்தது என்று பெற்றோர் கருதுகின்றனர்.

இதுசம்பந்தமாக முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி சபைக்கு அனுப்பிவைத்த மகஜரில், முல்லை மாவட்ட அபிவிருத்தி சபை முன்னாள் உறுப்பினர் திரு கா. தம்பாப்பிள்ளை புதுக்குடியிருப்பு கி. மு சபை உறுப்பினர் பொ. பாலசிங்கம், சி. சிதம்பரப்பிள்ளை உட்பட பலமுக்கிய பிரமுகர்கள் கைச்சாத்திட்டுள்ளனர்.

—...

(ஒட்டுசுட்டான்)

பழமரக் கன்றுகள் நாற்றுக்கள் முதலியவற்றை விவசாயிகளுக்கு வழங்க உற்பத்தி செய்து கொடுப்பதற்கு முத்து ஐயன்கட்டு தனியார் நிறுவனம் ஒன்றுக்கு விவசாய திணைக்களம் அங்கீகாரம் வழங்க உள்ளது

### மணிவாக்கு

நம்முடைய புனித புராணங்களையெல்லாம் வெறும் உருவகங்களாகவும் ஈசாப் கதைகளாகவும் செய்து விடுவது எனக்குச் சம்மதம் இல்லை. உருவகங்களைக் கொண்டு நாம் பிழைக்க முடியுமா?

உள்ளத்தின் அழுக்கைப் போக்க புராணங்களும் நம்முடைய புனித நதிகளும் உயிர் கொண்டு ஓடுகின்றன; அவற்றில் குளிப்போமாக.

—ராஜாஜி.

# நமது நோக்கு

## (அ) நீதித்துறையின் அதிகாரம்

நீதி தெய்வத்துக்குச் சமானமானது; எங்கள் வாழ்த்துப் பாட்டில் ''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'' என்ற அடி உலகனைத்தையும் பரிபாலிக்கிறது நீதியென்பது தெளிவு. சைவ நீதி உலகநீதி.

''சட்டத்துக்கு முன் எல்லோரும் சமம்'' என்றவாசகத்தில் சட்டம் என்பது சட்டபரிபாலனம்; சட்டபரிபாலனத்தில் அரசுக்கு எதிராகவே நீதி வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். ஜனநாயக ஆட்சியில் அரசனும் ஆண்டியும் ஒரேவித நீதிக்குரித்தானவரென்பதை அறிக!

நாமிங்கு குறிப்பிடும் பிரச்னை குற்றவியல் நடவடிக்கை முறை (சிறப்பேற்பாடுகள்) திருத்தச் சட்ட மூலத்தைப் பற்றியதே இச் சட்டத்திருத்தத்தின் மூலச் சட்டம் 1978ம் ஆண்டு பாராளுமன்றத்தில் நிறைவேறியது.

இது ஒரு தற்காலிக ஏற்பாடு என்று அப்போது இடம்பெற்றநீதிக்குமாறான அம்சங்களுக்கு அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமாதானம் கூறியது. இன்று அது நிரந்தரமாகிவிட்டது. இதன் கருத்து என்ன?

சந்தேக நபர்களை பிணையில் விடுவது தொடர்பாக நீதிமன்றங்களுக்கு இருக்கும் அதிகாரங்களை அந்த மன்றங்களிலிருந்து எடுத்து அவற்றை சட்டமா அதிபருக்குவழங்கியதால், இந்தக் காலகட்டத்தில் பல அநீதிகள் இடம்பெற்றனவென்று பாராளுமன்றத்தில் நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் காரசாரமாக விவாதித்திருக்கிறார். அவர் விளக்கியிருக்கும் அநீதி தெளிவானது.

நீதியைநாடுபவரும் நடுவுநிலைமை விரும்பும் சிந்தனையாளர்களும் நல்லூர் எம். பி. யின் வாதத்தை ஏற்றுக் கொள்ளமுடியும். பயங்கர வாதமென்னும் ஒரு அர்த்தமற்ற சொல் நாட்டின் அமைதி வாழ்வுக்கு யமனாக வருகிறது

பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த உருவானஇந்தச் சட்டப் பயங்கரவாதத்துக்கே ஒருமதிப்புண்டாக்கி விட்டது.

இச்சட்டத்தின் கீழ் சந்தேக நபர்கள் பட்டியலில் இடம்பெற்ற பல அப்பாவிகள், சில கௌரவமும் கல்வியும் நிரம்பிய குடிமக்கள், பிணை மறுக்கப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு, பலவித அநாகரிகமான இம்சைகளுக்கு ஆளாகின்றனர்.

இந்த ஆதாரத்தைக் கொண்டும் குறிப்பாகவடக்கில் நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதங்கள், சத்தியாக்கிரகங்கள் ஒரு சமுதாய ரீதியில் அமைந்திருக்கின்றன. சாதி மதபேதமின்றி அநீதியைக் கண்டித்து நீதிகோரி நடத்தும்அமைதிஎதிர்ப்புக்களைத் தடுக்கசட்டம் எதுவுமில்லை.

ஆனல் அவசரகாலச் சட்டத்தில் எவருக்கும் என்னவும் நடக்கலாமென்ற அபாயம் உண்டு. சட்டத்தின் கொடிய அம்சம் இது: சட்டம் 'நல்ல பிள்ளையாயிருந்தாலும் அதனை நிர்வகிக்கும் பேர் வழிகள் 'கொடுமையையே' இலகுவான பாதையாகக் கணிக்கின்றனர். சந்தேகத்தில் சிக்கிய யாவரும் வலையில் சிக்கிய பெருஞ் சுறுவென நினைக்கின்றனர்.

இதற்கெல்லாம் இடமளிப்பது எது? சந்தேக நபர்களின் பிணைப்பிரச்னை, நீதிமன்றத்தில் ஆஜராகும் சந்தேக நபர்கள் நீதவானின் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டவர்கள். இருபகுதியினரின் வழக்கை விசாரித்து பிணை வழங்குவதா அல்லது மறுப்பதா என்பது அவருடைய தீர்ப்பு; அதனை நிராகரிப்பது அதற்கு மேற்பட்ட நீதிமன்றம்; எதுவும் நீதிமன்றத் தீர்ப்பாகவே இருக்கவேண்டுமென்பது தெளிவு,

அரசாங்கம், குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் ஒரு பக்கச் சார்புடையதே; அது வழக்காளி. அரச வழக்காளியின் மாபெரும் தலைவரே சட்டமா அதிபர்.

எனவே இந்தப் பொறுப்பை — நீதி வழங்கும் பொறுப்பை, வழக்கில் ஒரு பகுதியினருக்கு எவ்வாறு கொடுக்கலாம்?

அப்பாவி மக்கள் சந்தேகத்தில் விளக்கமறியலுக்குப் பலியாகலாம்; உண்மைக் குற்றவாளிகள் பிணை பெற்று சுகவாழ்வு வாழவும் இடமுண்டு. நாம் வற்புறுத்துவது தராசுக்கோல்போல் நீதி வழங்கும் அதிகாரம், பொறுப்பு, அந்த மனப்போக்கு சட்டமா அதிபருக்கு உரித்தானதல்ல.

அது நீதிமன்றத்துக்கே உரியது. இது திருத்தப்பட்டால் குற்றவியல் சட்டத்தின் கீழ் சாத்தியமான பல கொடுமைகள் நீங்க வழி பிறக்கும்.

சர்வசன வாக்கெடுப்பு

# 70 ஆண்டுதேர்தல்வரலாற்றில் இரத்தக்கறைபடிந்தநிகழ்ச்சி

## சுதந்திரக்கட்சி யாழ். கிளை கவலை

(யாழ்ப்பாணம்)

''கடந்த 22ந் தேதிநிகழ்ந்த மக்கள் தீர்ப்புக்கான சர்வஜன வாக்கெடுப்பானது அவசரகாலச் சட்டத்தின்கீழும், ஐ. தே. க. தலைவர்களும் குண்டர்களும் கட்டவிழ்த்து விட்ட பயங்கரவாத சூழ்நிலையிலும் நடைபெற்றதை யாவரும் அறிவர். இலங்கையின் 70 ஆண்டு காலத் தேர்தல் வரலாற்றில் இது ஒரு இரத்தக்கறைபடிந்த நிகழ்ச்சி என சி. ல. சு. க. யாழ். மாவட்ட அமைப்புக்குழு சுட்டிக்காட்டி கண்டிக்கிறது.''

அண்மையில் கூடிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். கிளை இவ்வாறு தீர்மானம்நிறைவேற்றியது. திரு. கு. விநோதன் தலைமையில்கூடிய மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது!

ஐ. தே. க. பா. உக்கள் சிலர் உட்பட ஐ. தே. க. வின் பலர் ஜனநாயக விரோத நடவடிக்கைகளிலும் வன்செயல்களிலும் ஈடுபட்ட அதேவேளையில் சு. க. தலைவர்களும் ஊழியர்களும் தேர்தல் முகவர்களும் கைதுசெய்யப்பட்டனர். பலர் குண்டர்கள், காடையர்களால் நையப் புடைக்கப்பட்டனர். சிலர் கொல்லப்பட்டனர். பலர் வாக்கெடுப்பு நிலையங்களிலிருந்து விரட்டப்பட்டனர் அல்லது கடமைசெய்யாது தடுக்கப்பட்டனர். பல்லாயிரக்கணக்கான வாக்காளர்களின் வாக்காளர் அட்டைகள் பறிக்கப்பட்டு, வாக்களிக்கச்செல்லாது பயமுறுத்தப்பட்டனர் பலர் வாக்குச்சாவடிகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டனர். தேர்தல் அதிகாரிகளின் அனுசரணையுடன் ஆள் மாறாட்டங்கள் சர்வ சாதாரணமாக இடம்பெற்றன. இந்த நிலையில் இது ஒரு ஜனநாயகத்தேர்தல் அல்ல என நாம் கருதுகின்றோம்.

இந்த வாக்கெடுப்பில் பாதுகாப்புச்சேவை, தபால்தந்திச் சேவை, போக்குவரத்துச் சேவை உட்பட அரசயந்திரம் முழுவதும் ஐ தே க. வின் வெற்றிக்காகப் பயன்படுத்தப்பட்டன. டிசம்பர் 19ந்தேதியுடன் பிரசாரவேலைகள் அனைத்தும் சட்டரீதியாக தடுக்கப்பட்டபோதிலும், 21ந் தேதி மாலைவரை ஐ. தே. க பிரசாரப் பிரசுரங்கள் தபால்திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டன. அரசவாகனங்கள் வாக்காளர்களை வாக்குச்சாவடி வாயில்களிலேயே ஏற்றி இறக்கின பாதுகாப்புச்சேவையினர் இவற்றைப் பார்த்தும் பராமுகமாக இருந்தனர்.

பயங்கரச் சூழ்நிலையிலும் பயப்படாது சென்று, பானைக்கு வாக்களித்து ஏழு மாவட்டங்களிலும் 49 தொகுதிகளிலும் ஆளும் கட்சியின் சபாநாயகர், உப சபாநாயகர், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், மாவட்ட மந்திரிகள், பா. உ. க்கள் பலரை படுதோல்வியடையச் செய்ய தென்னிலங்கை மக்களுடன்

(5-ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

## ஹாட்லிக் கல்லூரி பெறுபேறு

தங்கள் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் ஹாட்லிக்கல்லூரியைப் பற்றி எழுதியுள்ளது மகிழ்ச்சிக்குரிய வரவேற்கத்தக்க விடயமாகும். கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளையும் தாங்கள் குறிப்பிட்டிருக்கலாம். அவற்றைப் பற்றிய குறிப்புகள் தங்களுக்கு கிடைக்காமலிருந்திருக்கலாம். எனவே சில குறிப்புகளை எழுதியுள்ளேன்.

கணிதப்பிரிவில் 3 மாணவர்கள் 4 A பெற்றுள்ளனர். அத்துடன் 20 மாணவர்களுக்கும் அதிகமாக AB 2Cக்கு மேல் பெற்றுள்ளனர். உயிரியல் பிரிவில் A 2 B Cஉம் அதற்கு சமமான வேறு பெறுபேறுகளும் கிடைத்துள்ளன வர்த்தக பிரிவில் 2 A B C என்ற பெறுபேற்றை ஒரு மாணவன் பெற்றுள்ளார். கடந்த வருடம் இக்கல்லூரியில் 3 மாணவர்கள் 4 A பெற்று அதில் ஒரு மாணவன் 360 புள்ளிகள் எடுத்து பல்கலைக்கழகத்திற்கு முதலாவதாக தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஓர் பழைய மாணவன்.
பருத்தித்துறை.

# எங்கும் சிவமயம் எல்லாம்சிவமயம்

சிவானுவம் பெற்றுச் சிவதர்மம் கைகூடியவர்கள், எப்பொருளையும் சிவனாகவே காண்பர். வேப்பம்பழம் சிவலிங்கமாகவும், அரிசியளக்கும் கொத்து சிவலிங்கமாகவும். தவளையின் ஒலி 'ஹர ஹர' என்பதாகவும் கொண்டவர்கள் சிவபக்தர்கள்.

நீராடும்பொய்கை, அம்மை அப்பன் வடிவிலமைந்துள்ளதாகக் காண்கின்றார்கள். கருங்குவளை எம்பிராட்டியையும், செங்கமலம் எம்பெருமானையும் போன்றவை என்னும் உவமையொன்றேபோதும். இன்னும் ஒன்று வேண்டுமாயின் அழுக்கைக் கழுவும் குளமும், மலவழுக்கைப்போக்கும் இறைவனும் என்பதில் உள்ள ஒப்புவமை அருமையாயுள்ளதுதானே. பொய்கையில் தோயும்போது திருவருளில் தோயும் நினைவு இருக்கட்டும். எங்கே நீராடினாலும் அந்த நீர் கங்கைப் பிரவாகம் எனக்கருதல் சைவப்பண்பாட்டின் பாவனையாகும்.

### அம்மையின் அளப்பரிய உபகரிக்கும் ஆற்றல்

அம்மா என்றும் சும்மா இருப்பதில்லை. அவள் உயிர்கள் யாவும் உய்திபெறவேண்டும் என்னும் கருணை உள்ளத்தால் என்றும் உபகரித்துக் கொண்டே இருப்பள். நாம் பெற்ற வாழ்வும் வளமும், பேரும் புகழும், பேறும் பிறவும் அவள் தந்த ஆக்கமே

க.சி. குலரத்தினம்

யாம் அவள் பெய்வளை. அவள் எங்களைப் பொதுவாக நோக்காது வேறுபடுத்தித் தரங்கண்டு வரமளிப்பவள். எனவே பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை. அவள் தாய்மைக்குணத்தின் காதில் தோடணித்தவள். தாய்மார் காதில் வளையல் அணிவது தமிழ்ச் சைவப்பெண்கள் பண்பாடாகாது திருஞானசம்பந்தக் குழந்தை பாலூட்டிய இறைவியிடம் தோடுகண்டு பாடியருளியது. தாய்மைக் குணம் தோட்டில் தங்கியுள்ளது. தோடு தாய்மையின் வெளிப்பாடு.

### வேதப்பொருள் சிவபெருமான்

வேதங்கள் ஐயா என்று சிவபெருமானை பணிவன்போடு அழைக்கின்றன. வேதப்பொருளாகிய சிவபெருமானையும், வரந்தரும் பெருமாட்டியையும் வாயாரப் புகழ்ந்து நீராடுதல் சைவப்பண்பாடு. எம்பெருமாட்டியின் பாதத்திறம்பாடியாடுதல் பாவை நோன்பின் உயிர்நாடியாகும். அவள் இல்லாவிட்டால் இறைவன் பஞ்சகிருத்தியஞ்செய்திருக்கமாட்டார் அவள் துணைக்காரணம்தானே

### ஆட்கொள்ளும் வித்தகர்தாள்

சிவபெருமானுக்குத்

5-ம் பக்கம் பார்க்க)

# பறக்கும் கண் ஆஸ்பத்திரி

'கடவுள் கிருபை பெற்றவர்களே அமெரிக்க மக்கள்' என்பது ஜனாதிபதி றீகன் அமெரிக்க மக்களுக்கு விடுத்த இவ்வருடநத்தார் செய்தியாகும்,

அவருடைய கருத்து என்னவானாலும் இலங்கை மக்களுக்கு குறிப்பாக நாட்டின் வடபகுதிக்கு – ஏன் யாழ்ப்பாணத்துக்கு கல்வியிலும் மருத்துவத்திலும் அமெரிக்க மிஷனறிமார் இயற்றியசாதனைகள் அனந்தம்!

இன்று இலங்கைக்குவந்திருக்கும் பறக்கும் கண் ஆஸ்பத்திரி (ஓர்பிஸ்) இந்த நாட்டின் கடும் கண்நோயாளிகளுக்கும், கண்வைத்திய நிபுணருக்கும் ஒருவரப்பிரசாதமாகும்.

சுமார் 15 வருடங்களுக்கு முன் இங்கு வந்து நீண்டகாலம் சிகிச்சை அளித்த அமெரிக்க 'ஹோப்' கப்பலை மக்கள் மறந்திருக்க முடியாது.

எத்தனை 'ஹோப்' இல்லாத பேர்களுக்கு அது 'ஹோப்' கொடுத்தது! ஆனல் மறக்கும் கண் ஆஸ்பத்திரியின் உதவியை நாடும் எவரும் வாழ்க்கை அல் ஒளி இழந்தவர்கள் யில்லது அத்தகைய மக்களுக்கு வைத்திய நிவாரணம் அளிப்பவர்களே!

கண் வைத்திய நிபுணரின் சேவை விசேடமானது. திறமையும் தியாகமும் நிறைந்த மக்களுக்கு 'ஹோப்' அளிக்கும் சேவை அவர்களுடையது.

கடவுளைப்போல அவர்கள் கண்ணைக்கொடுக்கலாம் அல்லது கெடுக்கலாம். ஒரே ஒருவேறுபாடு! கடவுள் கண்ணைக் கெடுத்தால் கோலைக் கொடுப்பான். அந்த ஆற்றல் கண் வைத்தியர்களுக்கு இல்லை.

எனவே பறக்கும் கண் ஆஸ்பத்திரியில் வந்திருக்கும் கண் வைத்திய நிபுணரின் சேவையை முற்றாகப் பயன்படுத்த வேண்டியவர்கள் அவர்களே! நாட்டின் கண் வைத்திய நிபுணத்துவம் அதிகரிக்க ஒரு அரியசந்தர்ப்பம்.

அமெரிக்க நாட்டை நாம் பாராட்டும்போது, இதற்கு உடந்தையாக இருந்த சர்வதேச அரிமா சங்கத்தின் மனிதாபிமான சேவை சிறக்கவேண்டுமென வாழ்த்துகிறோம்


## யாழ். பா. வி. சங்கம் நடத்தும் உதைபந்தாட்டப்போட்டி

# மகாஜன - நடேஸ்வரா

## இறுதிப்போட்டியில் இன்று மோதல்!



ரவீந்திரன் (தலைவர்)
நடேஸ்வரா



ஜோகசிங்கம் (தலைவர்)
மகாஜன

யாழ். பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் வருடாந்தம் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே உதைபந்தாட்டப் போட்டியை இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக் மேலாக நடாத்திவருகின்றது. பாடசாலைகளுக்கிடையே உதைபந்தாட்டத் தரத்தை வளர்க்கும் பெரு நோக்குக் கொண்டு இவ்வரும் பணியை ஆற்றிவருகின்ற வேளையில் கடந்த வருடம் இப்போட்டி தடைப்பட்டது. உதைபந்தாட்ட ரசிகர்கள், வீரர்கள் மத்தியில் விசனத்தையும், விரக்தியையும் ஏற்படுத்தியது என்றாலகூட அது மிகையாகாது ஆனால் இவ்வருடம் நல்மனம் படைத்த தாராள சிந்தையாளர்களால் தடைகள் தகர்த்தெறியப்பட்ட போது இச்சங்கம் தனது சீரிய பாதையில், சிறந்த சேவையை ஆரம்பித்து தற்போது இறுதிப் போட்டியை நடாத்தும் இறுதிக் கட்டத்திற்கு வந்துள்ளது. இதில் பங்குகொண்ட பாடசாலைகளும் ஒரு வருட உதைபந்தாட்டத் தாகத்தின் பின் வெற்றிக் கிண்ணத்தைத் தமதாக்கிக்கொள்ள தளராது விளையாடின. ஒரு சில இடையூறுகள் குறுக்கிட்டபொழுதிலும், சங்கம் தனது நேரிய பாதையை விட்டு விலகாது நல்முடிவுகளை உடனுக்குடன் எடுத்து இறுதிப்போட்டிக்கு விரைந்துவந்துள்ளது.

பாடசாலைகளின் ஆரம்ப விளையாட்டை கண்ட ரசிகர்கள் இன்ன பாடசாலைகள் தான் இறுதிப்போட்டியில் மோதும் என்ற கணக்குகளும் கனவாகியது. முற்பகுதியில் விளையாடிய பாடசாலைகளின் விளையாட்டுக்களின் தரம் பிற்பகுதியில் முன்னுக்கு முரணாக மாறியதும் அனைவரும அறிந்ததே உதைபந்தாட்டப் மோட்டியில்கூட யார் வெற்றி பெறுவார் என்று சொல்ல முடியாதளவிற்குப் போட்டிகள் அமைகின்றன.

யாழ் பாடசாலைகள்கூட ஒன்றுக்கு ஒன்று தாம் சளைத்தவர்கள் அல்ல என்பதைப் போட்டி முடிவுகளின்போது நாம் காணக்கூடியதாக அமைகின்றது. இவ்வரிசையில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி கடந்த வருடங்களில் ஒன்பது தடவைகள் 'சாம்பியன்' கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது. 1967ம் ஆண்டுதொட்டு 1974ம் ஆண்டுவரை தொடர்ந்து எட்டுத் தடவைகள் 'சாம்பியனாக' வந்ததும், இவற்றுள் மூன்று தடவைகள் இணைப்புச் சாம்பியன்களாகவும் வந்துள்ளது 1975ம் ஆண்டு மகாஜனக் கல்லூரி தான் தொடர்ந்துபெற்றுவந்த வெள்ளிக் கிண்ணத்தைக் கொக்குவில் இந்துக் கல்லூரியிடம் பறிகொடுத்தது. அதே போல் இவ்வருடமும் அதே

இரு கல்லூரிகளும் இறுதிப் போட்டியில் மோதலாம் என்ற ரசிகர்களின் எண்ணத்தை நடேஸ்வராக் கல்லூரி மாற்றியமைத்தது.

மகாஜனக் கல்லூரி ஆரம்பத்தில் ஆடிய விளையாட்டிற்கும், தொடர்ந்தும் விளையாடிய போட்டிகளிலும் முன்னேற்றத்தை காணக்கூடிதாகவிருந்தது. மகாஜனவின் பயிற்றுநர் திரு. ரி. பத்மநாதன் அவர்களின் திறமையை யாவரும் அறிந்ததே. அவர் தனது கல்லூரியைச் சிறந்த முறையில் பயிற்றுவிப்பதைமகாஜனவின் அடுத்தடுத்த போட்டிகளில் காணக்கூடியதாகவிருந்தது. திரு. ரி. பத்மநாதன் மீண்டும் சரித்திரம் படைக்கலாம் என்ற 'ஹேஸ்ய'மும் உதைபந்தாட்ட ரசிகர்கள் மத்தியில் நிலவிவருகிறது.

### 'ஜெயம்'

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி நாம் சளைத்தவர் அல்ல என்பதை 1960-ம் ஆண்டு 'பி' பிரிவில் ''சாம்பியன்'' வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றது மட்டுமல்லாமல் சில தடவைகள் இறுதிப்போட்டியில் மோதும் சர்தர்ப்பங்கள் கிடைத்தும்கூட ''சாம்பியன்'' கிண்ணத்தை பெருதது துரதிஸ்டம் என்றே கூறலாம் இருந்தும் இன்றைய இறுதிப் போட்டியில் மோதி வெற்றிக் கிண்ணத்தைத் தமதாக்கிக் கொள்ளலாம் என்று கூடச் சொல்லலாம்.

காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி இவ்வருடமுதல் ஆட்டத்தின் நீண்ட இடைவேளைக்குப்பின் மீண்டும் மைதானத்தில் குதித்து அரையிறுதிப்போட்டியில் மின்னி முழங்கியது போல வெற்றி கண்டது ரசிகர்களின் கணக்கில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. நடேஸ்வரா உதைபந்தாட்டத்தில் ஒரு முன்னணிப் பாடசாலை என்பதையும் மறப்பதற்கில்லை. கடந்த இறுதிப்போட்டியில் மோதி இரண்டாம் இடத்தைப்பெற்றதும் நினைவில் உள்ளது. மகாஜனக் கல்லூரியின் உதைபந்தாட்டக் குழுவில் அங்கம் வகித்து, திரு. பத்மநாதனின் பயிற்சியில் சிறந்தவீரராகத்திகழ்ந்த திரு. எஸ். தங்கராஜாதான் நடேஸ்வராவின் பயிற்சியாளர் அவர் தனதுபழைய பாடசாலையுடன் மோதுவதற்கு நடேஸ்வராக் கல்லூரிக்குப் பயிற்சி அளிப்பது பல வித்தைகளில் குருவும் சிஷ்யனும் மோதியகதைகளும் குருவை சிஷ்யன் வெற்றி பெற்ற கதைகளும் ஞாபகத்தில் வரத்தான் செய்கின்றது. எது எப்படி இருந்தபோதிலும் போட்டி முடிவுகளின் தீர்க்கதரிசனம் இப்போ சொல்வதற்கில்லை.

ஒரே தொகுதியில் அமைந்த இவ்விரு பாடசாலைகளும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியதும் இங்கு குறிப்பிடக்கூடியது விளையாட்டு வீரருக்குரிய சிறந்த மனப்பான்மையுடன் இவ்விரு கல்லூரிகளும் தமது விளையாட்டுச் சாதுரியத்தை நிச்சயம் காண்பிப்பார்கள் என்ற ஆவலுடன் பல்லாயிரக் கணக்கான ரசிகர்கள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கிற்கு இன்று படையெடுப்பார்கள் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. ஆனால் முடிவு விளையாட்டுக் களத்தில் தான் தெரியும். இவ் இறுதிப் போட்டியை யாழ். மக்கள் என்றுமே கண்டிராதளவிற்குச் சிறப்பாக நடாத்த யாழ்.பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் ஏற்பாடுகள் செய்து வருகின்றது. உலகக் கிண்ண உதைபந்தாட்டப்போட்டி இம்முறை யாழ். நகரில் நடைபெறுகிறதோ என்ற சந்தேகம் ரசிகர்கள் மனதில் எழலாம் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

### மகாஜனக் கல்லூரி

**1-ம் கோஷ்டி வீரர்கள்**

பி. ஜோகசிங்கம் (தலைவர்), கே. குகதாசசிங்கம், என். ஸ்ரீ பவன், பி. மனோரஞ்சன், ஆர். சிவகுமார், எஸ். உதயகுமாரன், ஆர். ஸ்ரீகாந்தன், எம். எட்வேட் மோகனசீலன், ஈ. பிரமேஸ்வரன், ஆர். பானுகோபன், என். ஜோகதாஸ், பி. வீரையா, எம். பிரம்நவாஸ், எஸ். ஜெயதேவன், ரி. சாந்திநாதன், என். ஜெயகுமார்.

### நடேஸ்வராக் கல்லூரி

**1-ம் கோஷ்டி வீரர்கள்**

என். இரவீந்திரன் [தலைவர்] எஸ் எம். ஜஷ்ரின் குறூஸ் (உப தலைவர்), பி. தர்மகுலருஜா, ரி. றவி, ஜே ஜே பதமகுமார், ரி. சந்திரசேகரர், ஆர் ருஜேஸ்வரன், கே. உமாபாலன், ஏ. றூபி ஜோசேப், எம். விஜேயானந்தன், ஆர் குமரகுருபரன், ஏ. அரசகுலசிங்கம், ரி. துரை அலகன், எஸ். சேகர். எஸ். சாந்தகுமார், கே. பாலமுரளி

## 70 ஆண்டு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓரணியில் வாக்களித்த யாழ். மாவட்ட வாக்காளர்களுக்கு எமது நன்றி கலந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

அனுகூலமற்ற நிலைமையிலும், அயராது உழைத்து, ஜனாதிபதி தேர்தலிலும் பார்க்கக் கூடுதலான வாக்குகளை அளித்த யாழ். மாவட்ட மக்களுக்கும், எம்மோடு ஒத்துழைத்த இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, இடதுகம்யூனிஸ்ட் கட்சி சிறீலங்கா சமசமாஜக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி ஆகியவற்றுக்கும், இன்னும் தனித்தனியாகவும் கூட்டாகவும் பானைக்கு வாக்களித்த தமிழர் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ், சுயாட்சிக் கழகம் முதலியவற்றுக்கும், இதர தொழிற்சங்கங்கள் இளைஞர் இயக்கங்கள், மாணவர் மன்றங்கள், மதஸ்தாபனங்கள், மக்கள் நிறுவனங்கள் பத்திரிகைகள் அனைத்துக்கும் எமது உளமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

# தமிழ்ஈழ விடுதலைப் பேரவை பிரான்சில் உதயம்

பாரிஸ், டிச 27

பிரான்ஸ் நாட்டில் இயங்கி வந்த பிரான்ஸ் தமிழர் இயக்கமும். தமிழர் ஒழுங்கிணைப்புக் குழுவும் ஒருங்கிணைந்து தமிழீழ விடுதலைக்குப் போராடுவதற்காக பிரான்சுவாழ் தமிழ் மக்களின் ஏகோபித்த ஒரே விடுதலை இயக்கமாக தமிழீழ விடுதலைப் பேரவை (பிராவசு) என்ற பெயரில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது என அப்பேரவையின் பொதுச்செயலாளர் அறிவித்துள்ளார். இதுசுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இத்தமிழீழ விடுதலைப் பேரவை. பிரான்சுவாழ் ஈழத் தமிழர்களின் பிரதிநிதியாக சுயமாக இயங்குகின்றது எனவும், இது வேறெந்தவொரு அமைப்பின்கிளையாக இயங்காதெனவும், தமிழீழ மக்களின் நலன்குறித்து ஒரு சமதர்ம பொதுவுடமை அமைப்புமுறையில் தனித்தமிழீழ நாட்டை அமைக்கும் இலட்சியத்துடன், அதற்காகப் போராடவும் இயங்குகின்றது எனவும் தமிழீழ மக்களுக்கும், மற்றய நாட்டு மக்களுக்கும் இ பேரவை அறிவித்துக்கொள்கின்றது

அத்துடன் இத்தமிழீழ விடுதலைப்பேரவை தமிழின விடு விடுதலைக்குரலாக ''தமிழ் முரசு'' என்னும் விடுதலைப் பத்திரிகையை வெளியிடுகின்றது எனவும் தெரிவித்துக் கொள்கிறது. (இ)

## இளைஞருக்கு கத்திக்குத்து

(கிளிநொச்சி)

பழைய பகைமைகாரணமாக வாலிபரொருவர் கடுமையான கத்திக்குத்து காயத்திற்குள்ளாகி கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் கிளிநொச்சி கனகபுரத்தில் வசிக்கும் எஸ். வேலாயுதம் என்பவரே கத்திக்குத்திற்காளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார் கத்தியால் குத்தியதாக கருதப்படும் திருநகரை சேர்ந்த கே துரை என்பவர் தலைமறைவாகியுள்ளதால் சந்தேகநபரைத் தேடி கிளிநொச்சிப் பொலிசரர் வலை விரித்துள்ளனர்.

## எங்கும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தொழில், அன்பர்கள் அடியார்களைத் தேடிச்சென்று ஆட்கொள்ளுதல். பக்குவமில்லாதவர்கள், நான் கடவுள் என்றவர்கள் முதலானோர் ஒடுமட்டும் ஓடுங்கள், ஆடுமட்டும் ஆடுங்கள், ஈற்றில் அம்மாடி என்று அம்மா அடியில் வீழுங்கள் என்று காலம் பாத்திருப்பர் ஓடி மீன்கென ஆடல், அஃதாவது ஆள்தல் பார்த்திருப்பவர் இறைவன். அவனை எம்பெருமான், சிவபெருமான் என்று வாயாரக் கண்ணீர் மல்கக் கசிந்துருகி நிற்றல் தலையன்பு.

### திருவருளே மழை

உமாதேவியார் உயிர்கள் மேல் இரங்கி அருள் சுரத்தலை மழையில் நன்றாகக் காணலாம். இரக்கமென்பது வானிலிருந்து தூய்மையாக ஒழுகும் மழைபோன்றது என்று ஆங்கிலப்புலவர் சேக்ஷ்பியரும் கூறியுள்ளார். அது நிற்க. பாவை நோன்பினர் வேண்டுவனவற்றுள் மழையும் ஒன்று. உமாதேவியாரின் இன்னருளாகப் பெய்யும் மழையிடை தோன்றும் மின்னல், எம்பிராட்டியின் இடைபோலவுள்ளது என்கிறார். முழக்கம் அவனின் திருவடிச் சிலம்பு ஒலிக்குமாப்போல் இருக்கிறதாம்.

## தவறவிட்ட பணம் கிடைத்தது

(புலோலி)

யாழ் பல்தொழிநுட்ப நிறுவன விரிவுரையாளர் ஒருவர் கொழும்பு – காங்கேசன்துறை மெயில் புகையிரதத்தில் கைதவறவிட்ட 800 ரூபா பணத்தை காங்கேசன் துறை புகையிரத அதிபரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

யாழ். பல் தொழில்நுட்ப நிறுவனவிரிவுரையாளரான திரு க. சிதம்பரநாதன் கொழும்பிலிருந்து காங்கேசன் துறைக்கு இரவு மெயில் புகையிரத உறங்கல் இருக்கையில் பிரயாணம்செய்துகொண்டிருக்கையில் 800 ரூபா பணத்தைத்தவறவிட்டிருந்தார் விரிவுரையாளரால் தவறவிடப்பட்டிருந்த இப்பணம் உறங்கலிருக்கை காவலாளி எஸ். சுப்பிரமணியத்தால் கண்டெடுக்கப்பட்டு காங்கேசன்துறை புகையிரத நிலைய அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

திரு. சிதம்பரநாதன் தவறவிட்ட 800ரூபா பணத்தையும் புகையிரதநிலைய அதிபரிடமிருந்து பெற்று மகிழ்ச்சியடைந்ததுடன், உறங்கலிருக்கை காவலாளி சுப்பிரமணியத்தின் நேர்மையைப்பாராட்டி புகையிரதத்திணைக்கள தலைமைப்பீடத்திற்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

## சிவதோத்திரம்

ஆக்குவாய் காப்பாய் போற்றி
அழித்திருள் தருவாய் போற்றி
போக்குவாய் புணர்ப்பாய் போற்றி
புறம்புறந் திரிவாய் போற்றி
தூக்குவாய் துடைப்பாய் போற்றி
துகளறு சுகத்தாய் போற்றி
தாக்குவாய் தகர்ப்பாய் போற்றி
சங்கரா போற்றி போற்றி

ஓங்குவாய் ஒளியாய் போற்றி
ஓதுநா வுறைவாய் போற்றி
நீங்குவாய் நிறைவாய் போற்றி
நீடிரு வடியாய் போற்றி
தேங்குவாய் தெளிவாய் போற்றி
தேவியாய்த் திகழ்வாய் போற்றி
தாங்குவாய் தமிழாய் போற்றி
சங்கரா போற்றி போற்றி

— ச. தங்கமாமயிலோன்

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை 3-ம் கட்டம்

# முக்கியமின்சாரமீற்றர்கள் திடீர்மறைவு:

## நாசவேலையா? திருட்டா?

### இறுதிக்கட்டவேலைகள் பாதிப்பு!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை 3ம் கட்டப்பிரிவு மின்சார கட்டுப்பாட்டு அறையிலிருந்து பெறுமதிவாய்ந்த இரு மின்சார மீற்றர்கள் திருடப்பட்டுள்ளது இதுகுறித்து காங்கேசன்துறை பொலிசார் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர். இது நாசவேலையா எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

3ம் கட்டப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள மின்சாரக்கட்டுப்பாட்டு அறை பூட்டப்பட்டிருந்தபோது பூட்டை உடைத்த இனந்தெரியாதவர்கள் அங்கிருந்த மின்வயர்களை சேதப்படுத்தியதுடன் மேற்படி இரு மீற்றர்களையும் திருடிச் சென்றதாக கூறப்படுகிறது.

ஜேர்மன் நிபுணர்களால் மிக நுட்பமான முறையில் மேற்படி மின்சார கட்டுப்பாட்டு அறையில் இணைப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும், மீற்றர்கள் ஜேர்மனியிலிருந்தே வருவிக்கப்பட்டிருந்ததாகவும், கூறப்படுகிறது.

மிகவும் துணிகரமாக மின் இணைப்புகளின் மத்தியில் மேற்படி மீற்றர்களை களவாடியவர்கள் மின்தொழில் நுட்பத்துறையில் தேர்ச்சிபெற்றவர்களாகவே இருக்கவேண்டுமென பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

மேற்படி அறையில் கையடையாளங்களைப் பதிவுசெய்ய பொலிசார் ஏற்பாடுகளை மேற்கொண்டபோது அங்கு கையடையாளங்கள் எதுவும் இருக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இது திருட்டா? அல்லது நாசவேலையா? என்று ஆராய்வதற்காக பொலிசார் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

3ம் கட்ட பிரிவில் வேலைகள் யாவும் பூர்த்தியடைந்து வருவதால் விரைவில் இதனை திறந்து வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுவந்ததாகவும், மேற்படி சம்பவத்தால் அது தடைப்பட்டுள்ளதாகவும் மேலும் கூறப்படுகிறது.

3ம் கட்டப்பிரிவு திட்ட முகாமையாளர் திரு. எம். டி. எப். ஜெயமானே கொழும்பு சென்றிருந்தபோதும் இதனைக் கேள்விப்பட்டதும் உடன் திருப்பி விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

## ஊக்குவிப்புதிட்டம்

(புலோலி)

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் 29ம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் யாழ். உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளர் திரு எஸ். ரீ. மார்க்கண்டு தலைமையில் நடைபெறவுள்ளது.

உடுப்பிட்டி எம். பி திரு. த. இராசலிங்கம், பருத்தித்துறை எம். பி திரு கே. துரைரத்தினம், யாழ் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. எஸ் சிவதாசன், பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு வை. வேலும்மயிலும், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு கே. ஐயாத்துரை, பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் ரீ கதிரவேற்பிள்ளை, சிவதர்மவள்ளல் திரு க. கனகராசா ஆகியோர் இக்கூட்டத்தில் கருத்துரை வழங்குவார்கள்.

இக்கூட்டத்தில் டசுத்தீன் புல் உற்பத்திக்கு நிதி உதவி, மானியம் அளித்தல் பற்றிய நடவடிக்கைக்கான கருத்தரங்கு ஒழுங்கு செய்தல், கால்நடை பொருட்காட்சி ஒழுங்கு செய்தல், பால்சேகரிப்பு வழங்கல் விற்பனை ஒழுங்குகள் பற்றி ஆராயப்படும்.

# "அதர்மம் தலைதூக்கும்போது

## இறைவன் அவதாரமெடுப்பார்!"

### ஆழ்வார் ஆலயத்தில் வாரியார் விருந்து

(புலோலி)

"தலையில் சுழி உள்ளது சீவன். சுழியில்லாதது சிவன். சீவன் தவம் செய்யும்போது சிவத்தையடையும். வேதங்களும் இதையே கூறுகின்றன. இறைவன் தர்மம்குன்றி அதர்மம் தலைதூக்கும் வேளைகளில் அவதாரமெடுத்து அதர்மத்தையழித்து தர்மத்தை நிலைநாட்டி உலகை உய்விப்பார்".

இவ்வாறு அருள்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் "திருமால் தசாவதாரங்கள்" பற்றிக் கதாப்பிரசங்கம் ஆற்றுகையில் குறிப்பிட்டார். ஆலயத்திற்கு வருகை தந்த வாரியாருக்கு ஆலய அறங்காவல் குழுத் தலைவர் திரு. க. கணபதிப்பிள்ளை மலர் மாலை அணிவித்தார். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. எஸ் சிவபாதம் வரவேற்று உரையாற்றினார் தொடர்ந்து பிரசங்கம் செய்த வாரியார் குறிப்பிட்டதாவது:-

"வேதங்கள் திருமுறைகள் என்பன எம்மை வாழவைக்கும் நூல்கள். அவற்றினை நாம் படிக்கவேண்டும். தவம் செய்யும் சீவன் சிவமாகலாம் என்பதை வேதங்கள் எமக்குப் புகட்டுகின்றன. இறைவனை ஒரு நாளைக்கு அரை நிமிட நேரமாவது நினைந்துருகவேண்டும். இறை தியானம் வாழ்வின் உயர்ந்த இன்பத்தை வழங்கும்.

"வேதங்கள் இறைவனின் பெருமைகளை எமக்குக் கூறுகின்றன. இறைவனின் பெருமைகளை வேதங்கள் கூறுவதனால் அரக்கர்கள் வேதங்களை மறைத்து வைத்தார்கள். வேதங்களைக் காணாத தேவர்கள் நாராயணனிடம் ஓடிச் சென்று முறையிட்டார்கள். தேவர்களின் முறையீட்டினால் எம்பெருமான் அரக்கர்களிடமிருந்து வேதத்தை மீட்டார்.

"இவ்வுலகில் தர்மம் குன்றி அதர்மம் தலைதூக்கும்போது அதர்மத்தையழித்து தர்மத்தை நிலைநாட்டி உலகை உய்விக்க இறைவன் அவதாரங்களை எடுப்பார். அவர் மச்ச, கூர்ம, வராக, நரசிம்ம, வாமன, பரசுராம, இராம, பலராம, கிருஷ்ண அவதாரங்களை எடுத்தார். இனிமேல் கல்கி அவதாரத்தை எடுப்பார். உலகில் அதர்மம் அழிந்து தர்மம் நிலைநாட்டப்படும்.

"ஆலய தரிசனம் எமக்கு மிக இன்றியமையாதது ஆலயங்கள் சிறப்பாக இயங்க வேண்டும். ஆலயங்களில் இறைவன் வீற்றிருந்து எமக்கு அருள் பாலிக்கின்றான்.

"இவ்வாலயத்தில் அமைக்கப்பட்டுவரும் இராஜகோபுரம் இப்பகுதியின் செழிப்புக்கும் மக்களின் இன்பத்திற்கும் வழிவகுக்கும். எனவே இவ் இராஜகோபுர திருப்பணி நிதிக்கு அடியார்கள் போதிய உதவிகளை வழங்கவேண்டும்".

## புத்தக கண்காட்சி

(புலோலி)

யாழ். மக்கள் பிரசுராலயத்தினரின் புத்தகக்கண்காட்சியும் விற்பனையும் பருத்தித்துறை தியேட்டர் மண்டபத்தில் நடைபெற்றன. கலை இலக்கியம் பொருளாதாரம், விஞ்ஞானம், அரசியல், தொழில் நுட்பம் முதலிய பல்வேறு துறைகளிலும் சிறுவர்கள், மாணவர்கள் பொதுமக்கள் அனைவருக்கும் பயன்படக்கூடிய பல நூல்கள் கண்காட்சியில் இடம்பெற்றன.

## பொலிகண்டி பாரதி சனசமூக நிலைய கலை விழா

(வல்வெட்டித்துறை)

பொலிகண்டி பாரதி சனசமூக நிலையம் வழமைபோல் இம்முறையும் தைப்பொங்கல் தினத்தன்று இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியையும், அடுத்தநாள் கலை விழாவையும் கொண்டாட இருக்கிறது.

கலைவிழாவின் போது நிலைய மாணவ மாணவிகளின் நடன, நாடக நிகழ்ச்சிகள் இடம்பெற உள்ளன. தைப்பொங்கல் தினத்தன்று வெளிக்கழகங்களுக்கான விளையாட்டுப் போட்டியும் இடம்பெறும். கலைவிழாவன்று நிலைய வீரர்கள் சில சாதனைகளையும் செய்துகாட்ட முன்வந்துள்ளனர்.

"கிராமங்களிலுள்ள

# இயற்கை மூலவளங்களை நிறைய பயன்படுத்தவேண்டும்

(புலோலி)

"கிராமங்களில் உள்ள இயற்கை மூலவளங்கள் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டு கைத்தொழிற்துறைகள் மேற்கொள்ளப்படவேண்டும். கிராமிய இயற்கை மூலவளங்களைக் கொண்டு கைத்தொழிற்துறைகள் மேற்கொள்ளப்படும்போது கிராமிய அபிவிருத்தி மேம்பாடடையும், கிராமிய அபிவிருத்தியில் மாதர்களின் பங்கு மிகமுக்கியமென்பதைக் கருத்திற்கொண்டு மாதர்கள் சிறப்பாக இயங்கவேண்டும்."

இவ்வாறு புலோலி கிழக்கு மாதர் கிராமஅபிவிருத்திச் சங்கத்தின் கைப்பணிப் பொருட்காட்சியைத் திறந்துவைத்து உரையாற்றிய புலோலி கிழக்கு கிராமசேவை அலுவலர் திரு தோமஸ் அன்ரனி குறிப்பிட்டார். புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் மாதர் சங்கத்தலைவி திருமதி அ. திரேசம்மா தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய திரு. தோமஸ் அன்ரனி குறிப்பிட்டதாவது:

"எமது கிராமங்களைப் பொறுத்தவரையில் பனைவளம் எமக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும் பனைவளத்தை நாம் சரியானமுறையில் பயன்படுத்துவோமானால் எமது பகுதியின் பொருளாதாரத்தை நாம் நிச்சயம் மேம்படுத்தமுடியும். பனைவளங்கள் போன்ற இயற்கைவளங்களைச் சரியானமுறையில் பயன்படுத்துவதில் கிராமஅபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராமமுன்னேற்றச்சங்கங்கள் ஆகியன முன்னிற்கவேண்டும்.

"மாதர்கள் தமது வீடுகளில் இருந்துகொண்டே பனம் கைப்பணிப் பொருட்கள் தயாரித்தல், தையல் வேலை, ஆடு, மாடு, கோழி வளர்த்தல் போன்றன மூலம் வருவாயைப் பெற்றுக்கொள்ள முடியும் இப் பொருட்காட்சிகள் மூலம் எமது கிராமங்களின் மூலப்பொருட்களின் பயன்பாட்டையும், கிராமிய பெண்களின் தொழில்நுட்ப திறமைகளையும் வெளிக்காட்ட முடியும்" என்றார்.

பருத்தித்துறை உதவிகிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி க. நவமணி உரையாற்றுகையில், கிராமங்களில் வாழும் ஒவ்வொருபெண்ணும் தத்தமது கிராம வளர்ச்சியில் பங்குகொண்டு உழைக்கவேண்டும். கிராமிய அபிவிருத்திக்கு அரசாங்கம் வழங்கும் உதவிகளை முழுமையாகப் பயன்படுத்தவேண்டும் என்றார்.

மாதர்சங்க உறுப்பினர்களின் பனம் கைப்பணிப் பொருட்கள், தையல்பொருட்கள், பின்னல் வேலைப்பொருட்கள் என்பன இப்பொருட்காட்சியில் இடம்பெற்றன.

# உணவு முத்திரைகளுடன் கச்சேரிஊழியர் தலைமறைவு!

(கொழும்பு)

புத்தளம் கச்சேரியில்கடமையாற்றும் ஊழியர் ஒருவர் ரூ. 41,000 பெறுமதியான உணவு முத்திரைகளுடனும், ஒரு தொகைப் பணத்துடனும் தலைமறைவாகியுள்ளார்.

இவரைத்தேடி புத்தளம் பொலிஸார் தீவிரபுலன்விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்,

சர்வஜன வாக்கெடுப்புக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியே இந்த நபர் வாக்கெடுப்புக்கு ஓரிரு தினங்களுக்கு முன்னர் உணவு முத்திரைகளுடனும் பணத்துடனும் தலைமறைவாகியுள்ளார்.

களவாடப்பட்ட உணவுமுத்திரைகள் ஆனமடுவ, புத்தளம் பகுதிகளுக்கு விநியோகிக்கப்படுவதற்காக வைக்கப்பட்டிருந்தவையாகும். இவற்றுடன் கையாடப்பட்ட பணம் இப்பகுதிகளின் சமூக சேவைகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்தது. (கி)

## அமைச்சர் தொண்டர் உடன் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கிராமிய தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சர் தொண்டமான், தை மாதத்திற்குரிய சம்பள முற்பணத்தை முழுச்சம்பளத்தில் 50சதவீதமாக தைமாதம் 7ம் திகதி வழங்கும்படியும், வழமையாக முற்பணம் பெறுபவர்களுக்குப் இச்சலுகையை வழங்கும்படியும் அமைச்சர் நிதியமைச்சருக்கு வேண்டுகோள்விடுத்துள்ளதாக அவரது மேலதிக செயலாளர் கலாநிதி. வி. இராமநாதன், திரு க. சி. இராஜேஸ்வரனுக்கு அறிவித்துள்ளார்.

"ஈழநாடு பத்திரிகையில், மக்கள் கருத்துப் பகுதியில் சர்வசன தேர்தல் காரணமாக 15ம் திகதி அரச ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கப்பட்டிருப்பதால் 14ம் திகதி வரவிருக்கும் தைப்பொங்கலை 25ம் திகதி பெறவிருக்கும் சம்பளத்தில் அதாவது நாற்பது நாட்களுக்கும் சம்பளத்தில் கொண்டாடுவதில் இருக்கும் கஷ்டத்தை விளக்கி திரு இராஜேஸ்வரனின் கடிதம் பிரசுரிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## பருத்தித்துறை நூல் நிலையம்

(புலோலி)

பருத்தித்துறையில் எட்டு லட்சம் ரூபா செலவில் பொது நூல் நிலையத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகளைப் பருத்தித்துறை நகராளுமன்றத் தலைவர் சட்டத்தரணி எம். வேலும்மயிலும் துரிதமாக மேற்கொண்டு வருவதாக நகராளுமன்றச் செயலாளர் திரு எஸ். இராஜதுலம் தெரிவித்தார்.

பருத்தித்துறை கல்லூரிவீதியில் இருக்கும் நகரசபைக்குச் சொந்தமான காணியில் அமையவுள்ள இந்நவீன மாடிக் கட்டிட பொது நூல் நிலையம் ஆய்வுகூடம், கேட்போர்கூடம் சிறுவர்பகுதி ஆகியனவற்றையும் கொண்டிருக்கும்.

இந்நவீன மாடிக்கட்டிட பொது நூல் நிலைய அமைப்புக்கான நிதியில் ஒரு பகுதியைப் பருத்தித்துறை எம் பி. திரு கே. துரைரத்தினம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்துள்ளார்.

## மின்இணைப்பு...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு மின்சார இணைப்பு வழங்க 30 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான வேலைகள் இப்பொழுது பூர்த்தியடையும் நிலையிலுள்ளன

மேலும் மாரீசன்கூடல்—கருகம்பனை, கொல்லங்கலட்டி, சளானைப் பகுதிகளிலும் மின்சார இணைப்பு பொருத்தப்படவிருக்கிறது. இதற்கு 30 ஆயிரம் ரூபா செலவாகும். இதற்கான வேலைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. (அ)

ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் - சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி.ஞாயிறு 2-30
கார்த்திக் — ராதா
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்-சரோஜாதேவி
பணத்தோட்டம்

இன்னும் சில தினங்கள்
றீகல் (யாழ். நகர்)
நான் (ஈஸ்ட்மன் கலர்)
விரைவில்
எங்கவீட்டுப்பிள்ளை

சாந்தி (யாழ். நகர்)
தினசரி 5 காட்சிகள்
RINGO STARR
BARBARA BACH in
Cave Man
(Action–Horror–Color)
(ஆதி கால மனிதனின்
குகை வாழ்க்கையின்
அதிசயம்)

# கால்நடை வளர்ப்பில் பயிற்சி பெற்றனர்

(புலோலி)

பருத்தித்துறை, உடுப்பிட்டி, கோப்பாய் தொகுதிகளில் உள்ள இளம் விவசாயிகள் கழகங்களைச் சேர்ந்த 23 இளைஞர், யுவதிகளுக்கு கோண்டாவில் ''உந்துகொட', பண்ணையில் கால்நடை வளர்ப்பில் ஐந்து நாள் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டன.

பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலக விவசாய விஸ்தரிப்பு சேவை அலுவலர் (கால்நடை) திருமதி இராமநாதன் தலைமையில், இவ் இளைஞர்கள் கால்நடை வளர்ப்புப் பயிற்சியைப் பெறுவதற்காகச் சென்றிருந்தனர்.

கால்நடை வைத்திய நிபுணர்களான திருமதி சுபண்ணு பாலசுப்பிரமணியம், திரு தங்கராசா, திருமதி தங்கராசா ஆகியோர் இப்பயிற்சி வகுப்புக்களை நடத்தினர். கிராமிய கைத்தொழில் அமைச்சின் திட்டத்திற்கமைய நடாத்தப்பட்ட இப்பயிற்சி வகுப்புக்களில் கால்நடை வளர்ப்பு நோய்கள் தடுப்பு முறைகள், உணவு வகைகள் பற்றியனவற்றில் செய்முறைப் பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 13ந் திகதி
செவ்வாய்க்கிழமை
[28—12—82]

மேடம்: வாய்வுக் கோளாறு உடல் நலத்தைப்பாதிக்கலாம் உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும். வியாபாரிகள் நஷ்டமடைவர். புதிய முதலீட்டைத் தவிர்க்கவும்.

இடபம்: இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும். இதயபாரம் வேதனைப் படுத்தும். திட சித்தம் இருப்பின் எதையும் சமாளிக்கலாம்.

மிதுனம்: ஒளிமயமான நாள் ஆலய வழிபாட்டில் ஆர்வம் செலுத்துவீர்கள். உங்கள் உற்சாகத்தில் பெற்றோரும் துணை நிற்பர், விருந்தினர் வருகைக்கும் இடமுண்டு.

கடகம்: அன்னியர்களுடன் பழகுவதில் அதிக கவனம் செலுத்தவும், சகோதர மூலம் பிரச்னை உருவாகலாம். எதிலும் அவதானம் வேண் ம்.

சிங்கம்: வாழ்க்கையில் சிலருக்கு முன்னேற்றமான சம்பவங்கள் இடம் பெறும், வாகன விருத்தியுண்டு நீர்ப்பாசனப் பகுதியில் கடமையாற்றுபவர்களுக்குச் சிறப்பானதினம்.

கன்னி: மக்களால் மகிழ்ச்சி புதுமையில் நாட்டம் பிறக்கும் குடும்பப் பிரச்னைகளில் சுமுகமான நிலை தென்படும். அதிர்ஷ்ட லாபமும் கிடைக்கும். பொன்னான நாள்,

துலாம்: உங்கள் நடவடிக்கைகள் அனைத்தும் இன்று வேவு பார்க்கப்படும். தொழில் துறையில் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு சதி நடைபெறலாம். அகால போசனத்தினால் வயிற்றுக் கோளாறு ஏற்படும்.

விருச்சிகம்: உவகை தரும் சம்பவங்கள் இடம்பெறும் குடும்பத்தவர்களின் வாழ்வில் இனிமை தவழும். சிலர்வாழ்க்கையில் காதலும் அரு்பும்,

தனு: கடன் தொல்லைகள் கவலையைத் தரலாம். உறவினர்களு—ன் பிணக்குகள் தோன்றும். புதிய முதலீட்டைத் தவிர்ப்பதுடன் உஷாராக இரு்கவும்,

மகரம்: புத்திக்கூர்மையுடன் புதிய எண்ணங்கள் தலைதூக்கும். புத்திரர்களாலும் புகழும் கிடைக்கும், இறை நம்பிக்கையுடன் இல்லத்திலும் இனிமை தவழும்.

கும்பம்: வசதிகள் பெருகும் வரவிலும் திருப்தி ஏற்படும். செல்வாக்குப்பெருகும். செல்வாக்குப் படைத்தவர்களின் ஆதரவு கிடைக்கும். ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த விடயமொன்று சாதகமான முடிவைத்தரும்.

மீனம்: கனிவான சம்பவங்கள் இடம்பெறும், அபிப்பிராய பேதங்கள் மறைந் பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர். குழந்தையொன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரலாம். தொழில் புரியுமிடத்தில் மாற்றமுண்டு.

சோதிடக்கலாநிதி
**திருமலை**
**க. வேலுப்பிள்ளை**

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஜெயலலிதா
சவாலேசமாளி

50வது நாளைத்தாண்டி அனேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க புத்தாண்டுவரை நீடிக்கப்பட்டுள்ளது.
தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
ராணி
(யாழ். நகர்) சிவாஜி-உஷா நந்தினி நடித்த
என்னைப்போல் ஒருவன்

கடைசி வாரம்
தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
ஸ்ரீதர் (யாழ். நகர்)
BRUCE LEE in
THE WAY OF THE DRAGON
த வே ஒவ் த ட்றகன்

மனோகரா
(யாழ்நகர்) தினசரி 5 காட்சிகள்
TRUE STORY OF BILLY HAYES
IN
MIDNIGHT EXPRESS
(Strictly For Adults Color)

வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்)
காலை 10-00 மணி முதல் பிற்பகல் 1-00 மணிவரை ஆசனங்கள் முன்கூட்டியே பதிவுசெய்யலாம்.
காதல் என்பது தெய்வீகமானது. இந்த தெய்வீகத்தின் ஆலயமாக விளங்கும் வசந்த மாளிகையை இன்றே பாருங்கள். ரசிகப்பெருமக்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி.
★ சிவாஜி ★ வாணிஸ்ரீ
பாலாஜி, நாகேஷ்
நடித்த
"வசந்தமாளிகை"

# முதியோர் தினம்

(மானிப்பாய்)

சர்வதேச முதியோர் ஆண்டை ஒட்டு மானிப்பாய் கிராமோதய சபை இம்மாதம் 31ம்திகதி சர்வதேச முதியோர் தினத்தைக் கொண்டாடுகிறது.

திரு. சி இராசேந்திரம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பகல் முதியவர்களுக்கான கதம்ப நிகழ்ச்சிகளும், பேச்சுக்களும், மத்தியபோசன விருந்தும் நடைபெறும்.

# அமரர் மாணிக்கம்

முன்னாள் மூதவை உறுப்பினர் திரு மு. மாணிக்கத்தின் மரணம் நம் நாட்டு மக்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்

திரு. மாணிக்கத்தின் அரசியல் வாழ்வு தமிழரசுக்கட்சியில் ஆரம்பித்தது.

சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தைமுதலாவதாக எதிர்த்த கட்சி தமிழரசுக்கட்சி. ஆனால் அவ்வொப்பந்தம் சட்டவாக்கம்பெற்றபோது தமிழரசுக் கட்சி திரு. டட்லி சேனநாயகாவின் தலைமையிலான அரசில் அங்கம்வகித்தது. எனவே அக்கட்சி சட்டத்தை ஆதரிப்பதென முடிவுசெய்தது ஒப்பந்தத்திலிருந்த கட்டாய நாடுகடத்தல் சட்டத்தில் இல்லையென இக்கட்சித் தலைவர்கள் வாதிட்டனர்.

அப்போது மூதவையிலிருந்த தமிழரசுக்கட்சியின் உறுப்பினரான திரு. மாணிக்கம் அச்சட்டத்தை எதிர்த்து அவையில் பேசும்போது சட்டவாக்கத்தின் தலைப்பை வாசித்துக்காட்டி இச் சட்டத்தை ஆதரிப்பதன்மூலம் தமிழரசுக் கட்சி எதிர்த்த சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம் அல்லாத வேறேதும் ஒப்பந்தத்தை அமுல் செய்யும் சட்டவாக்கத்தையா ஆதரிக்கின்றீர்கள் எனக் கேட்டார். சட்டத்தை ஆதரிக்க முடிவுசெய்த தமிழரசுக்கட்சி அங்கத்தினரில் ஒருவராக முன்னாள் அமைச்சர் திரு. திருச்செல்வமும் மூதவையில் இருந்தார். ஆனால் திரு. மாணிக்கத்தின் கேள்விக்கு அவரோ அல்லது வேறு யாரோ ஒருபொழுதிலும் பதில் சொல்லவில்லை; சொல்லவும் முடியாது

பிரதிநிதிகள் சபையிலும் மூதவையிலும் அப்பொழுதும் தமிழர் பலர் அங்கத்தினர்களாக இருந்தனர். ஆனால் ஒரு தமிழனுமே சிறிமா—சாஸ்திரி ஒப்பந்த அமுல்சட்டத்தை எதிர்க்கவில்லையென்ற வரவிருந்த வரலாற்றுக்கறையை நீக்கியவர் திரு. மாணிக்கம் அவர்களே.


ஆனால் திரு. மாணிக்கம் கட்சிக்கட்டுப்பாட்டை மீறிய குற்றச்சாட்டின்பேரில் தமிழரசுக்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார், கட்சியினர் கேட்குமுன்பே இக்கட்சியால் தமக்குக் கொடுக்கப்பட்ட மூதவை உறுப்பினர் பதவியை தாமாகவே கைவிட்டார். இதிலிருந்து தமிழரசுக்கட்சிக்குள் கொள்கைரீதியான பிளவு ஏற்பட்டது.

திரு. மாணிக்கம் அதன் பின்பு ஈழத்தமிழரின விடுதலை இயக்கத்தைத் தோற்றுவித்து அரசியலில் தீவிர ஈடுபாடு காட்டினார். கல்முனைத் தொகுதியில் ஏற்பட்ட அடுத்த இடைத்தேர்தலில் தமிழரசுக் கட்சியை எதிர்த்துப் போட்டியிட்டார்.

திரு நவரத்தினம் தமிழர் சுயாட்சிக் கழகத்தை ஆரம்பித்தவுடன் திரு. மாணிக்கம் அவர்கள் தமது ஆதரவாளர்களுடன் இக்கழகத்தில்சேர்ந்து அதன் துணைத் தலைவராகப் பணியாற்றினார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சிமாநாட்டின்போது இறந்த தமிழர்களுக்காக மட்டக்களப்பில் 'ஹர்த்தால்' நடத்தி இன ஒற்றுமைக்கு உறுதியான பாலம் அமைத்த திரு. மாணிக்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்தேனும் இனவிடுதலைக்காக உழைக்க வேண்டும் என்ற எண்ணம் பின்பு கொண்டிருந்தார். ஆனால் அவரது உடல்நிலை அவரைத் தொடர்ந்தும் பணியாற்ற வாய்ப்பளிக்கவில்லை.

செ. கோடீஸ்வரன்.



# பதவி உயர்வு

[யாழ்ப்பாணம்]

நயினாதீவு மகாவித்தியாலயத்தில் தற்காலிக அதிபராகக் கடமையாற்றிய திரு. நா. க. சண்முகநாதபிள்ளை ஸ்ரீலங்கா கல்விச்சேவை ஐந்தாந்தர வகுப்பிற்குப் பதவிஉயர்வு பெற்றுமேற்படி வித்தியாலயத்திற்கு நிரந்தர அதிபராக நியமனம் பெற்றுள்ளார்

இவர் கலை இலக்கியம், சமயத் துறைகளில் ஆர்வமுடையவர். ஒரு கவிஞரும் எழுத்தாளரும் பேச்சாளருமாவார்.

சென்னைப் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரியும் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்வி டிப்ளோமாப் பயிற்சியும் பெற்ற இவர் யாழ். மத்திய கல்லூரிப் பழையமாணவராவார்.

# 2வது ஆண்டு பூர்த்தி விழா

[யாழ்ப்பாணம்]

சென். ஜோன் அம்புலன்ஸ் யாழ் இந்துக்கல்லூரிக் கிளையின் 2ம் வருட பூர்த்தி விழா யாழ் இந்துக் கல்லூரி மண்டபத்தில் தலைமை அதிகாரி திரு. எஸ் சண்முகராசா தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட அத்தியட்சர் திரு. ஈ. பி. இராசையா இந்த ஸ்தாபனம் தேவஸ்தானங்களிலும் விழாக்களிலும் ஆற்றிவரும் சேவையையிட்டுப் பாராட்டுக் கடிதங்கள் தமக்கு வந்து கொண்டு இருப்பதாகவும், தொண்டர்கள் சுறுசுறுப்பாயும் உற்சாகமாயும் கடமை புரிவதையிட்டும், கிருபானந்த வாரியார் பிரசங்கங்களின் போது அவர்கள் ஆற்றிய சேவைபற்றியும் பல பாராட்டுக் கடிதங்கள் கிடைத்துள்ளதாகவும் கூறினார்.

புதிதாக நியமனம் பெற்ற யாழ். பிரிவு அதிபர் திரு. கே. அருளானந்தத்திற்கு மாவட்ட கௌரவக் காரியதரிசி செல்வி ராதா சோமசுந்தரம் இவ்விழாவில் நியமனப் பத்திரம் வழங்கிப் பல முன்னேற்றக் குறிப்புகளையும் கூறினார்.

மாவட்ட ஆணையாளர் குழுவினர் முதலுதவிச் சிகிச்சை முன்னேற்றம், சீருடை, வருடாந்த அணிவகுப்பு, ஒழுங்குமுறை ஆகியவற்றை குழுநிலையில் ஆலோசனை செய்து திட்டம் தயாரித்தனர்.

# வீட்டுத் தோட்டப் போட்டிகள்

(ஒட்டுசுட்டான்

விவசாயத் திணைக்களமும், தேசிய இளைஞர் சேவை மன்றமும் இணைந்து அகில இலங்கை ரீதியில் வீட்டுத் தோட்டப் போட்டி ஒன்றினை நடாத்தவுள்ளன, இதற்கான சுற்று நிருபம் விவசாய சேவை நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

போட்டிகள் ஜனவரி இரண்டாம் வாரத்தில் ஆரம்பமாகும் என்றும் தோட்டங்களை அதிகாரிகள் பெப்ரவரி இரண்டாம் வாரத்தில் பார்வையிடுவார்கள் என்றும் உள்ளூர் மலைநாட்டு மரக்கறி வகைகள், தானிய வகை, கிழங்கு வகை, பழவகை, கீரைவகை, அவரை இனங்கள், மிளகாய், வெங்காயம் போன்ற பயிர்கள் போட்டிக்கு செய்கை பண்ணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

(வேலணை

நயினாதீவு அம்மன் ஆலயத்திற்கு அருகிலமைந்துள்ள மூன்று காணித்துண்டுகளின் ஆட்சி உரித்துத்தொடர்பான பிரச்னைக்கு நிவாரணங்கோரி நேற்றுக்காலை வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனை முன்றலில் ஆரம்பித்த உண்ணாவிரதம் காவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்தின் உறுதியை அடுத்து நேற்றுமாலை கைவிடப்பட்டது.

நயினாதீவு வள்ளுவர் சமூக சேவைக்கழகம், முடியிறக்கல் தொண்டர்சபை, யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் ஆட்சி உரித்திலுள்ள மேற்படி காணித்துண்டுகளை நீதிமன்ற உத்தரவுடன் தனிநபர் ஒருவர் ஆட்சிப்படுத்தியுள்ளமையை ஆட்சேபித்தும், அக்காணிகளின் ஆட்சிஉரித்தை மீட்டுத்தருமாறும் கோரிநேற்றுக் காலை வேலணை உதவி அரசாங்க அதிபர்பணிமனையில் வேலணை பிரதேசசபைத்தலைவர் நா. சிவராசசிங்கம் தலைமையில் உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டு மாலை வரை தொடர்ந்தது.

காவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்தின் வேண்டுகோளை ஏற்று முடியிறக்கல் தொண்டர்சபையின் ஆட்சியிலிருந்த காணிதொடர்பாக உடன் சட்டநடவடிக்கை மேற்கொள்வதற்கும், வள்ளுவர் சேவைக்கழக ஆட்சியிலிருந்த காணி தொடர்பான சட்டவியாக்கியானத்தை காணி ஆணையாளரிடம்பெற்று நடவடிக்கை எடுக்கவும், யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபையின் உரித்துக்காணி தொடர்பாக அச்சபையினால் உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்யாழ் அரசாங்கஅதிபர் திரு தேவநேசன்நேசையாஅறிவித்திருந்தார். இவ்விஷயங்களைத்துரிதப்படுத்த தாம் நடவடிக்கை ஒழுங்குகளை மேற்கொள்வதாக பண்டிதர் கா. பொ. இரத்தினம் உறுதி அளித்தார் இதனை அடுத்தே உண்ணாவிரதம் கைவிடப்பட்டுள்ளது என உண்ணாவிரதத் தலைவர் நா. சிவராசசிங்கம் தெரிவித்தார்.

## தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம்)

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோவில் தேர்த்திருவிழா நாளை புதன்கிழமை பிற்பகல் நடைபெறுகிறது நாளை மறுதினம் வியாழன் காலை தீர்த்தோற்சவம் நடைபெறும். (உ)

## "ஈழநாடு" பஞ்சாங்கம் 1983

1983-ம் ஆண்டுக்குரிய "ஈழநாடு" பஞ்சாங்கம் சகல அம்சங்களையும் கொண்டு 01-01-1983 'ஈழநாடு' இதழுடன் வெளிவரும். வாசகர்கள் தங்களது பிரதிகளுக்கு உடன் "ஈழநாடு" ஏஜெண்டுகளுடன் பதிவு செய்து கொள்ளுங்கள்.

ஏஜெண்டுகள் மேலதிகப் பிரதிகளுக்கு விநியோகப் பகுதியுடன் தொடர்பு கொள்ளவும்.

விநியோகப் பகுதி,
"ஈழநாடு" லிமிட்,
யாழ்ப்பாணம்.

## கடத்தப்பட்ட--

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இருந்து அரை மைல் தூரத்தில் அந்த வானைப் பொலிஸார் கைப்பற்றினர்.

வானில் தடயப் பொருட்கள் எதுவுமே இருக்கவில்லை. கைவிரல் அடையாளங்களை பொலிஸார் படம்பிடித்தனர். வான் உரிமையாளர் ஏ. ஸி. ஜெயினுலாப்தீன் அடையாளம் காட்டினார். வானின் இலக்கம் மாற்றப்பட்டிருந்தது.

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. பி. ஏ ஜி திஸேரா விசாரணை நடத்திவருகின்றார்.

## ஜனவரி--

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சட்டத்தரணி திரு. எம். சிற்றம்பலம் சந்தேக நபர்கள் சார்பில் ஆஜராகியிருந்தார்.

நீதிபதி இது என்னவழக்கு என்று வினவினர். அவசர கால நிலைமையில் சட்டத்தை மீறி ஊர்வலம் சென்றவழக்கு என பொலிஸ்தரப்பில் கூறப்பட்டது.

பொலிசாரால் சேதப்படுத்தப்பட்டு கைப்பற்றப்பட்ட பொருட்கள் இன்னமும் உரியவர்களிடம் கொடுக்கப்படவில்லையென்றும் அவைபொலிசாரிடம் இருப்பதிலும்பார்க்க நீதிமன்ற பொறுப்பில் இருப்பது பாதுகாப்பாகவிருக்கும் என்றும் சட்டத்தரணி தெரிவித்தார்.

ஜீப்வண்டி, கஸட்றேடியோ கமிரா போன்ற பொருட்கள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டிருப்பதாக சட்டத்தரணி தெரிவித்தார்.

நீதிபதி குறித்தபொருட்களை நீதிமன்ற பொறுப்பில் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார். 83 ஜனவரி மாதம் பத்தாம் திகதிக்குமுன் இவர்கள் மீது வழக்குத்தொடர வேண்டும் என்றும், இல்லையெனில் பொருட்களை உரியவர்களிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

பொலிசார்சட்டமாஅதிபருக்கு அறிவித்திருப்பதாகவும் அவர துபதில் வந்ததும் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தனர்.

வழக்கு விசாரணை பின்போது அடிக்கடி சட்டத்தரணிக்கும் பொலிசாருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. வழக்கை பார்வையிட ஏராளமானமக்கள் நீதிமன்றத்தில் கூடியிருந்தனர். [பெ]

காரைநகர்

## சிவன்கோவில் இரதோற்சவம்

[காரைநகர்]

காரைநகர் சிவன்கோவிலில் இரதோற்சவம் நாளை நடைபெறும் காலைஒன்பதுமணிக்கு சுவாமி தேருக்கு எழுந்தருளுவார்.

இரதோற்சவத்தில் கச்சேரி செய்ய தமிழகத்திலிருந்து நாகஸ்வர வித்துவான் ஆண்டான் கோவில் செல்வரத்தினம்வருகைதந்துள்ளார். விசேட பஸ்சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. காலை 9-45 மணிமுதல் பகல் 12 மணிவரை வானொலி அஞ்சல் நடைபெறும் மணிவாசகர் மடாலயத்தில் அன்னதானமும் வழங்கப்படும், இரவு ஆருத்ரா அபிஷேகம் நடைபெறும்.

யாழ். நவீனசந்தை

# புடவைக்கடையில் கடத்தல் துணிகள்!

### பொலிசார் கைப்பற்றினர்

[யாழ்ப்பாணம்]

இருபத்த மூவாயிரம் ரூபா பெறுமதியான கடத்தல் துணி வகைகளை யாழ் பொலிஸார் நேற்றுக் கைப்பற்றியதுடன், கடை உரிமையாளரையும் கைது செய்தனர்.

யாழ் நவீன சந்தையில் உள்ள ஒரு புடவைக்கடைக்குச் சென்ற யாழ். பொலிஸ் தலைமைக் காரியாலய பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் கிருஷ்ணதாசன், சார்ஜன்ட் ஜி. மாசிலாமணி, கான்ஸ்டபிள்கள் ரி நவரட்ணம், எஸ். நவரட்ணம், எஸ் கனகலிங்கம் ஆகியோர் இந்தியாவிலிருந்துகடத்திவரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட 23,000 ரூபா பெறுமதியான துணி வகைகளைக் கைப்பற்றினர். அத்துடன், கடைஉரிமையாளரையும் கைது செய்து, யாழ். மாவட்ட சுங்க இலாகா கலெக்டர் எஸ்.எம்.ஜே.சேனரத்னவிடம் ஒப்படைத்தனர்.

துணிவகைகளைப் பறிமுதல் செய்யும்படி உத்தரவிட்ட சுங்ககலெக்டர், கடை உரிமையாளரை அபராதம் எதுவும் இன்றி விடுதலை செய்தார். (மா)

## அரச அதிபர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்காமல் மட்டக்களப்பு என்று மட்டும் அரசாங்க அதிபரால் அறிவிக்கப்பட்டது, இதனால் எனக்கு என் சமூகத்தவர்கள்மத்தியில் செல்வாக்கு குறைந்துவிட்டது என்ற கருத்து ஏற்பட இடமேறபட்டுள்ளது'' என்றார்.

அரசாங்க அதிபர் திரு. அந்தோனிமுத்து இதற்குச் சபையில் விளக்கமளித்தார்.

### அரச அதிபர் விளக்கம்

''வாக்குகள் ஒன்று இரண்டு என்று கணக்கெடுக்கப்பட்டாலும் அவை சமூகங்களின் அடிப்படையில் செய்யப்படவில்லை. காத்தான்குடி, ஏறுவூர் ஆகிய இரண்டு பட்டின சபைகளும் ஒரு பிரிவுக்குள் அடக்கப்பட்டன. ஆனால் இரண்டிலும் போதுமான வாக்குகள் இல்லாமையால் ஆறுமுகத்தான் கிராமசபையும் இதில் சேர்த்து எண்ணப்பட்டது. இந்தவாக்குகளை சமூகங்களின் அடிப்படையில் அறிவிப்பதற்கு எனக்கு அதிகாரமில்லை தேர்தல் ஆணையாளர் இந்த உரிமையைவழங்கினால் நான் செய்யமுடியும்'' என்றும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

### அதிகார துஷ்பிரயோகம்

பட்டிருப்பு எம். பி. திரு. கணேசலிங்கம் பேசுகையில் பொதுசன வாக்கெடுப்பின் போது அரசஅதிகாரிகள் சிலர் தமதுபதவிகளை துஷ்பிரயோகஞ்செய்துள்ளனர் என்று குற்றஞ் சாட்டினார்.

### கிராமசேவை அலுவலர்

''பட்டிருப்பு வாக்குச்சாவடியான்றில் கிராமசேவை அலுவலர் ஒருவர் ஒருகட்சியின் சின்னத்தை அணிந்து பணியாற்றிக்கொண்டிருந்தார். அந்தச்சின்னத்தை அகற்றிவிட்டு பணியாற்றும்படி அங்கிருந்த அதிகாரி ஒருவர் கேட்டுக்கொண்டார். அவர் உடனே அமைச்சர் ஒருவரிடம் அறிவிக்க; அவர் பொலிசாரிடம் தெரிவித்து பொலிசார் அச்சின்னத்தை அணிந்தபடி பணியாற்றுவதற்கு கிராமசேவை அலுவலரை அனுமதிக்கும்படி அதிகாரியைவற்புறுத்தினார்கள்''. என்று தெரிவித்த பட்டிருப்பு எம். பி. திரு. கணேசலிங்கம்.

''வேறு ஒரு சாவடியில் பணியாற்றிக் கொண்டிருந்த அதிகாரி ஒருவரை இன்னொரு அதிகாரியிடம் காட்ட இவருக்கு இங்கு என்னவேலை என்று பொலிசார் கேட்டிருக்கிறார்கள்'' என்று கணேசலிங்கம் கூறினார். (பெ)

## பாரதி ஆய்வரங்கு

யாழ்ப்பாணம்)

பாரதி நூற்றாண்டை முன்னிட்டு தேசிய கலை இலக்கியப் பேரவை நடாத்தி வந்த ஆய்வரங்குத் தொடரின் இறுதி ஆய்வரங்குநாளைபுதன்கிழமை மாலை யாழ் றிம்மர் மண்டபத்தில் நடைபெறும்.

'இலங்கை கண்ட பாரதி' என்ற தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் திரு. சி, தில்லைநாதன் ஆய்வுரை நிகழ்த்துவார். இவ் ஆய்வரங்கிற்கு எம். ஏ. நுஃமான் தலைமை தாங்குவார். (இ)

க. பொ. த. உயர்தரம்

## பெறுபேறுகள் கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆகஸ்ட்மாதம் நடைபெற்ற க பொ த. (உயர்தர) பரீட்சையின் பெறுபேறுகள் யாழ், மாவட்டத்திலுள்ள சில தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு இன்னும் கிடைக்கவில்லை.

இது தொடர்பாக சிலதனிப்பட்ட பரீட்சார்த்திகள் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

## 350 பொலிசார் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 30ம் திகதி ஆரம்பமாகவுள்ள க. பொ. த. [சாதாரணம்] பரீட்சைக்கான பாதுகாப்புநடவடிக்கைகளின் நிமித்தம் 350 பொலிசார் இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளனர், (வெ)

## உதவி மேயர் ராஜினாமா!

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர உதவி மேயர் திரு எஸ். அலோசியஸ் உதவி மேயர் பதவியிலிருந்தும், மாநகரசபை அங்கத்தவர் பதவியிலிருந்தும் ராஜினாமாச் செய்துள்ளார்.

தனது ராஜினாமாக் கடிதத்தை நேற்று நடைபெற்ற யாழ். மாநகரசபைக் கூட்டத்தில் சமர்ப்பித்தார்.

யாழ் மாநகரசபையின் புதிய உதவி மேயராக திரு. என். டி. செல்லத்துரை ஜனவரி முதல் பதவியேற்கவுள்ளார்.

திரு. அலோசியஸின் காலியான மாநகரசபை அங்கத்தவர் பதவிக்கு திரு. ஆசீர்வாதம் நியமிக்கப்பட்டுள்ளார். (மா-வெ)

## கிணற்றில் நிலவாயு கண்டுபிடிப்பு

புதுடில்லி, டிச. 27

ஆந்திரா பிரதேசத்திற்குருகிலுள்ள கோதாவாரி மாவட்டத்திலுள்ள புதிய கிணறு ஒன்றிலிருந்து நிலவாயுவும் எண்ணெய்யும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. வெ)

## 2-வது கிரிக்கெட் டெஸ்ட் பாக். வெற்றி

இஸ்லாமாபாத், டிச. 27

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே கராச்சியில் நடைபெற்ற 2-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் இன்னிங்ஸாலும் 86 ஓட்டங்களினாலும் வெற்றிபெற்றுள்ளது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்திருந்தது.

இவற்றுக்கிடையே இன்னும் நான்கு கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகள் இடம்பெறவுள்ளது. [வெ]

அசாம்

## முன்னாள் முதல்வர் காலமானார்

புதுடில்லி, டிச. 27

அசாம் முன்னாள் முதலமைச்சரும், பஞ்சாப்பின் முன்னாள் ஆளுநருமான மகேந்திர மோகன் சௌத்திரி மாரடைப்பினால் காலமானார் இறக்கும்போது அவருக்கு 75வயதாகும்.

## மரண அறிவித்தல்

### திருமதி மரியம்மா குருசுமுத்து

திருமதி மரியம்மா குருசுமுத்து காலமாகிவிட்டார். இவர், காலஞ்சென்ற அண்ணாவி குருசுமுத்துவின் மனைவியும், சவரிமுத்து (திருச்செல்வம்) மக்கள் வங்கி, பருத்தித்துறை, யேசுதாசன் (குணம்) மாக்கிறேற் ஆகியோரின் அன்புத் தாயாரும், செபமாலையம்மா, யேசுரட்ணம் ஆகியோரின் அன்பு மாமியும், எட்னா மரீனா, ஜேன் மரீனா, லூர்து ஜெயமலர் (ரதி, பிரான்சீஸ் குமார், உதயகுணசீலன், ரஞ்சித் ஜெயமலர், றெபின்சன், ஜோன்சன், சோபா மரியதாஸ் (இலங்கை வங்கி, சுன்னாகம்) ஆகியோரின் பேத்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் ஜேசுரட்ணம் இல்லத்தில் இருந்து ஆனைக்கோட்டை புனித அன்னாள் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக இன்று 28-12-82) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மக்கள், மருமக்கள்

5655

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் [illegible] 1982-ம் டிசம்பர் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number Q B. 100236/81 Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126,